வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu




Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 17.10.2024 வியாழக்கிழமை இதழ் : 290 பக்கங்கள் : 12

# மன்னார் புதைகுழி எச்சங்கள் ஆய்வுக்காக புளோரிடாவுக்கு!

## மனித எச்ச மாதிரிகளின் அறிக்கை நவம்பர் 21 ஆம் திகதி நீதிமன்றுக்கு

மன்னார், ஒக்ரோபர் 17

**திருக்கேதீஸ்வர மனிதப் புதைகுழி எச்சங்களை அமெரிக்காவின் புளோரிடாவுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சட்ட வைத்தியரினால் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டதுடன், அது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ள நீதிமன்றத்தினால் நேற்று கட்டளை ஒன்று ஆக்கப்பட்டுள்ளது.**

மன்னார் திருக்கேதீஸ்வரம் மனிதப் புதைகுழி மற்றும் மன்னார் சதொச மனிதப் புதைகுழி தொடர்பான வழக்குகள் நேற்று மன்னார் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

இதன்போதே மனிதப் புதைகுழி எச்சங்களை புளோரிடாவுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சட்ட வைத்தியரி னால் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. அது தொடர்பான

11



## ஐரோப்பிய எல்லைப் பகுதியில் யாழ். இளைஞரின் சடலம் மீட்பு!

### கொலையா? இயற்கை மரணமா? தீவிர விசாரணைகள் முன்னெடுப்பு

கொழும்பு, ஒக். 17

ஐரோப்பா எல்லைப் பகுதியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கோப்பாய் பகுதியைச் சேர்ந்த 25 வயதான

11

## மனித உரிமை மீறல் சம்பவங்கள் குறித்து உள்ளக பொறிமுறை மூலமே விசாரணை!

### அமைச்சர் விஜித ஹேரத் திட்டவட்டம்

கொழும்பு, ஒக். 17

நாட்டில் கடந்த காலங்களில் இடம் பெற்ற மனித உரிமை மீறல் சம்பவங்களுக்கு எதிராக உள்ளக பொறிமுறை ஊடாகவே சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். மீள் நிகழாமையை உறுதிப்படுத்துவதற்காக தேசிய பொறிமுறைக்கு சர்வதேச மனித உரிமை பொறிமுறையின் ஆலோசனை பெறப்படக்கூடும் என்று அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் மனித உரிமைகளை பாதுகாப்பதற்காக புதிய ஆட்சியின் கீழ் சாதகமான நடவடிக்கைகள்

11

## இந்திய - இலங்கை உறவுகளில் புதிய மனோநிலை அவசியம்!


### இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா வலியுறுத்து பிளவுபடுத்தும் முயற்சி குறித்தும் எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 17

கடந்த கால தயக்கங்களைக் கடந்து பொதுவான இலக்குகளை அடைவதற்கு மனோநிலையை மாற்றிக்கொள்ள வேண்டும் என இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வலுவான பங்காளித்துவத்தின் அவசியத்தை

11



## அரசியலில் இருந்து ஓய்வு பெறமாட்டேன்!

### அறிவித்தார் மகிந்த ராஜபக்ஷ

கொழும்பு, ஒக். 17

அரசியலில் இருந்து ஓய்வு பெறத் தயாரில்லை என்றும் தனது ஓய்வு தற்காலிகமானது என்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசியல்வாதிகள் ஒருபோதும்

11

ஈஸ்டர் தாக்குதல் விசாரணை:

## இரு அறிக்கைகளையும் திங்கள் வெளியிடுவேன்!

### உதய கம்மன்பில அரசுக்கு சவால்

கொழும்பு, ஒக். 17

"உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பான இரு விசாரணை அறிக்கைகளையும் எதிர்வரும் திங்கட்கிழமை வெளியிடுவேன்." - என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

"உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் இரு ஜனாதிபதி ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் இன்னும் பகிரங்கப்படுத்தப்படவில்லை. அவற்றை பகிரங் கப்படுத்துவதற்கு அரசாங்கத்துக்கு 7 நாட்கள் அவகாசம் வழங்கியுள்ளேன்.

11

## எக்னலிகொட, தாஜுதீன் விசாரணைகள் இறுதி கட்டத்தில்!

கொழும்பு, ஒக். 17

லசந்த விக்ரமதுங்க, பிரதீப் எக்னலிகொட மற்றும் தாஜுதீன் ஆகியோரின் குற்ற விசாரணைகள் ஏறக்குறைய முடிவடைந்துள்ள நிலையில், அவர்களைத் தவிர 7 முக்கிய குற்றவியல் வழக்குகள் துரித

11

## அமைச்சர்களுக்கு இனிமேல் 4 மெய்க்காவலர்கள் மட்டுமே!

கொழும்பு, ஒக். 17

எதிர்வரும் தேர்தலின் பின்னர் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான பாதுகாப்பு தொடர்பில் அரசு புதிய அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

இதன்படி இனி வரும் காலங்களில் அமைச்சர்களுக்கு நான்கு மெய்ப்பாதுகாவலர்கள் மாத்திரமே வழங்கப்படவுள்ளனர்.

அதேபோன்று, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இரண்டு மெய்ப்பாதுகாவலர்களை மாத்திரம் வழங்க வுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

பாதுகாப்பு அச்சுறுத்தல் உள்ளவர்களுக்கு

11






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

இப்போதெல்லாம் அரசியல்வாதிகள் எதைவேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் பேசலாம் என்றாகிவிட்டது. ஏனெனில் தமிழ் மக்கள் முன்னர் நடந்தவற்றை - அல்லது முன்னர் ஒருவர் கூறியவற்றை இலகுவாக மறந்து விடுவார்கள் என்று நம்புகின்றனர். அது கூட ஒரு வகையில் உண்மையானதுதான்.

சில வருடங்களுக்கு முன்னர் வெளிவந்த தமிழ் திரைப்படம் ஒன்றில் வந்த காட்சி ஒன்று இப்போது ஞாபகத்திற்கு வருகிறது. நடிகர் விஜய் அமெரிக்காவில் வாழும் உலக பணக்காரர்களில் ஒருவர், தமிழ் நாட்டில் நடக்கும் தேர்தலில் வாக்களிப்பதற்காக சென்னைக்கு வந்து வாக்களிக்க, வாக்களிப்பு நிலையத்திற்கு சென்றால் அவரது வாக்கை ஏற்கனவே ஒருவர் செலுத்தியிருப்பார். அதனால் அவருக்கு வாக்களிக்க முடியாமல் போய்விடும். அவர் தான் யார் என்பதை வெளிக்காட்டாமல் 'ரக்சி' ஒன்றை பிடித்துக்கொண்டு தேர்தல் அலுவலகத்தில் முறையிடுவதற்காக செல்வார். அப்போது ஓர் அரச அலுவலகத்தை கடந்து செல்லும்போது அந்த அலுவலகத்திற்கு முன்னால் ஒரு பெண் தன்னைத்தானே தீமூட்டி தற்கொலைசெய்துகொண்ட சம்பவம் ஒன்றை 'ரக்சி டிரைவர்' விபரிப்பார். விஜய்யும் ஆச்சரியத்துடன், "நீங்கள் என்ன செய்தீர்கள்?" என்று ரக்சி டிரைவரை கேட்பார். "ஒரு வாரம் முழுக்க நாங்கள் அதைப்பற்றித் தான் பேஸ்புக், டுவிற்றர் என்று எல்லாத்திலும் பேசிக்கொண்டிருந்தோம்." என்பார். அவர், அப்புறம் என்று கேட்டதும், டக்சி டிரைவர் சொல்வார், "வேறு ஒரு பிரச்னை வந்திட்டுது சேர், பிறகு அதைப்பற்றி பேசத் தொடங்கீற்றம்..." என்பார்.

அதுபோலத்தான், நாமும் ஒரு பிரச்னையைப்பற்றி கதைத்துக் கொண்டிருப்போம், பின்னர் ஒரு புதிய பிரச்னை வந்ததும், பழையதை மறந்துவிடுவோம். இது நமது அரசியல்வாதிகளுக்கும் நன்றாகவே தெரிந்திருக்கின்றது. அதனால்தான் அவர்களும் தொடர்ந்து தவறுகளைச் செய்துகொண்டே இருக்கின்றார்கள். ஜனாதிபதி தேர்தல் வரை தமிழ் பொதுவேட்பாளரின் சின்னமான சங்கு சின்னத்தை "உடைப்பேன்... கவிழ்ப்பேன் என்று சொல்லிக்கொண்டிருந்தவர், இப்போது யாரோ அதனை திருடிவிட்டார்கள்" என்று கண்ணீர் வடிக்கிறார்.

இதுபோலத்தான், தமிழ் அரசின் மாவை சேனாதிராசாவும் அவ்வப்போது பழையதை மறந்து எதையாவது கூறிக் கொண்டிருக்கின்றார்.

கடைசியாக அவர் திருவாய் மலர்ந்திருப்பது, "வழக்குகளைத் தொடர்ச்சியாகத் தாக்கல்செய்து இலங்கைத் தமிழரசுக் கட்சியை முடக்கச் சிலர் கனவு காண்கின்றனர். அதற்கு நாம் ஒருபோதும் இடமளியோம்."

தமிழ் அரசை முடிக்குவதற்கு வெளியே இருந்து யாரும் வரவில்லையே. நீங்கள் தலைவராக இருந்து செய்த காரியங்களால்தானே, வழக்குகள் ஒன்றுவிட்டு ஒன்று வந்துகொண்டிருக்கின்றது. நீங்கள் என்னடா என்றால் அதற்கும் உங்களுக்கும் சம்பந்தமே இல்லை என்பதுபோல யாரோ முடக்க நினைக்கிறார்கள் என்று, வேறு ஒருவர் மீது பழியைப்போட்டுவிட்டு தப்பித்துக்கொள்ளலாம் என்று நினைப்பது தமிழ் மக்களை ஒன்றும் தெரியாதவர்கள் என்று நீங்கள் நினைப்பதுபோல அல்லவா இருக்கின்றது.

அண்மையில் கட்சித் தலைவர் பதவியிலிருந்து விலகுவதாகவும் அதற்கான கடிதத்தை அனுப்பிவிட்டதாகவும் சொல்லியிருந்தது உங்களுக்கு ஞாபகம் இருக்கலாம்.

கட்சியின் யாப்பை ஒருதடவையாவது படித்திருந்தால், அந்த கடிதத்தை யாருக்கு அனுப்பவேண்டும் என்பதாவது தெரிந்திருக்கும். நீங்கள் செயலாளருக்கு அனுப்பவேண்டிய கடிதத்தை தெரிவுசெய்யப்பட்டபோதிலும் பதவியேற்க முடியாத தலைவராக "பரிதாபத்துக்குரிய தலைவராக" இருக்கும் ஒருவருக்கு அனுப்பியிருக்கமாட்டீர்கள்.

இப்படித்தான், கட்சி யாப்புக்கு முரணாக பொதுச்சபைக்கு ஆட்களை நியமித்ததால்தானே கட்சி நீதிமன்ற படிக்கட்டுக்களை ஏறவேண்டிவந்தது.

இப்போதும், கட்சியின் யாப்புப்படி இரண்டு ஆண்டுகளுக்கு ஒருதடவை கட்சி மாநாட்டைக்கூட்டி புதியவர்கள் தெரிவுசெய்யப்படவேண்டும் என்பதை நீங்கள் செய்யாததால்தானே, மற்றுமொரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது.

இவையெல்லாம் தமிழ் மக்கள் மறந்திருப்பார்கள்தான். அதற்காக நீங்கள் சொல்வது எல்லாவற்றையும் மக்கள் நம்புவார்கள் என்று நினைத்துக்கொண்டு என்ன வேண்டும் என்றாலும் சொல்லலாம் என்று நினைப்பது உங்பகளுக்கு அழகானது அல்ல.

"எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலுக்கான வேட்பாளர் தெரிவின்போது எம்மால் பிரேரிக்கப்பட்ட பல வேட்பாளர்களைப் புறந்தள்ளி சிலர் தன்னிச்சையான முடிவுகளை எடுத்து வேட்பாளர்களை நியமித்துள்ளமை உண்மைதான். அதனை நான் ஏற்கவில்லை. அதனால்தான் இம்முறை தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் இருந்து விலகிநிற்கின்றேன்."

இப்படியும் மாவை சேனாதிராசா தெரிவித்திருக்கிறார். அவரது துணிச்சல் பாராட்டுக்குரியதுதான். ஒரு தலைவராக வெட்கத்தை மறந்து சொல்வது என்பதும் துணிச்சலானது தான்.!

- ஊர்க்குருவி.

# ரூ. 25 இலட்சம் பெறுமதியான 16 பவுண் தங்க நகைகள் மீட்பு

## சாவகச்சேரி பொலிஸாரால் ஐவர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 17

சாவகச்சேரி பொலிஸாரின் அதிரடி நடவடிக்கை மூலம் 25 இலட்சம் ரூபாய் பெறுமதியான 16 பவுண் தங்க நகைகள் மீட்கப்பட்டிருப்பதுடன் ஐந்து சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 10ஆம் திகதி சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெருடாவில் பகுதியில் உள்ள வீடொன்றில் பகல் வேளையில் நுழைந்த கொள்ளையர்கள் வீட்டில் இருந்த 16 பவுண் நகைகள் மற்றும் தொலைபேசி ஆகியவற்றை கொள்ளையிட்டுத் தப்பித்திருந்தனர்.

கணவன் - மனைவி இருவரும் பணிக்குச் சென்று வீடு திரும்பிய நிலையிலேயே வீட்டில் திருட்டு இடம்பெற்றிருப்பது கண்டறியப்பட்டு அது தொடர்பில் பாதுகாப்புக் கமராவின் ஆதாரத்துடன் சாவகச்சேரிப் பொலிஸில் முறைப்பாடும் பதிவு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில் விரைந்து செயல்பட்ட பொலிஸார் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சந்தேக நபர்களான இரண்டு பெண்கள் மற்றும் நகைகளைப் பெற்றுக் கொண்ட வர்த்தகர்கள் இருவர் உட்பட ஐவரைக் கைது செய்தனர்.



அத்தோடு உருக்கப்பட்ட நிலையில் நகைகளும் - திருட்டுச் சந்தேக நபர்களான பெண்களிடம் இருந்து நகை விற்ற 7இலட்சம் ரூபாய் பணம் மற்றும் நகை விற்ற பணத்தில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆடம்பர மின் உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. (எ-05)


# சீரற்ற காலநிலை காரணமாக யாழில் 4 குடும்பங்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 17

மழையுடனான சீரற்ற காலநிலை காரணமாக யாழ்ப்பாணத்தில் நான்கு குடும்பங்களைச் சேர்ந்த 11 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், நான்கு வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்திருப்பதாக யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி. என். சூரியராஜா தெரிவித்தார்.

இதேவேளை, முக்கியமான இரு உட்கட்டமைப்புகள் சேதமடைந்துள்ளன. அவற்றில் ஒன்றின் மேல் மரம் சரிந்ததில் இவ்வாறு பகுதியளவில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

சங்கனை, நல்லூர் மற்றும் பருத்தித்துறை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளிலே இந்தப் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.(எ-5)



# பொலிஸ் உத்தியோகத்தர் வீட்டில் திருடியவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஒக். 17

நவாலி பகுதியிலுள்ள பொலிஸ் உத்தியோகத்தரின் வீட்டில் நகைகள் மற்றும் பணம் என்பன திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார். இவரை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்திய நிலையில் அவருக்கு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபரிடம் இருந்து மூன்றரைப் பவுண் தங்க நகையை யாழ்ப்பாணம் பிராந்திய குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் மீட்டனர்.

குளியலறை ஊடாக வீட்டுக்குள் நுழைந்த திருடர்கள், ஆறரை பவுண் நகை மற்றும் 29 ஆயிரம் ரூபாய் பணம் என்பனவற்றை திருடிச் சென்றனர். இந்த திருட்டு தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டதோடு, பிரதான சந்தேகநபரை கைது செய்யும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.(எ)

# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் உலக உளநல நாள் சிறப்பு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக். 17

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் உலக உளநல நாளையொட்டிய சிறப்பு ஒன்று கூடல் நிகழ்வுகள் நேற்றுப் புதன்கிழமை காலை கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் நடைபெற்றன.

ஆரம்பக் கல்வி நெறி ஆசிரிய மாணவி ஜெ. சுலோச்சனாதேவி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சிறப்பு பேச்சாளராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உளவியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி க. கஜவிந்தன் கலந்துகொண்டு "எண்ணங்களின் வலிமை" என்ற பொருளில் உரையாற்றினார்.



கலாசாலையின் பிரதி அதிபர் க. செந்தில்குமரன் விருந்தினர் அறிமுகவுரையையும் ஆரம்பக் கல்வி ஆசிரிய மாணவன் சி. டனிஸ்ரன் உளநல நாள் என்ற பொருளிலான உரையையும் ஆற்றினர். கலாசாலை அதிபர் சந்திர மௌலீசன் லலீசன் நிறைவுரை ஆற்றினார்.

கலாநிதி க. கஜவிந்தன் தான் எழுதிய நூல்களின் ஒரு தொகுதியை நூலக பொறுப்பு விரிவுரையாளர் வேலும்மயிலும் சேந்தனிடம் கையளித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
17.10.2024 வியாழக்கிழமை
பிலவ வருடம், புரட்டாதி 31

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## அரசியல்வாதிகளின் ஓய்வு

கலைக்கப்பட்ட பாராளுமன்றத்தின் ஐம்பதுக்கும் அதிகமான உறுப்பினர்கள் இந்த தடவை பொதுத் தேர்தலில் போட்டியிடவில்லை. இலங்கையின் அரசியல் வரலாற்றில் முன்னென்றும் இவ்வாறு நடந்ததில்லை. முன்னாள் ஜனாதிபதிகள், அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சரகள் மாத்திரமல்ல எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த பலரும் இதில் அடங்குகிறார்கள். சிலர் முற்றாகவே அரசியலில் இருந்து ஓய்வு பெறுவதாகவும் அறிவித்திருக்கிறார்கள்.

இவர்கள் எல்லோரும் தங்களது தீர்மானத்துக்கு பல்வேறு காரணங்களை கூறியிருக்கின்ற போதிலும், உண்மையான காரணம் தேர்தலில் தங்களை மக்கள் நிராகரிப்பார்கள் என்ற பயத்தை தவிர வேறு ஒன்றும் இல்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த இரகசியம். தோல்வி நிச்சயம் என்று தெரிந்தாலும், ஒதுங்கியிருக்கவோ அல்லது அரசியலில் இருந்து விலகவோ மனமில்லாத சில மூத்த அரசியல்வாதிகள் மாத்திரமல்ல இளையவர்களும் கூட வெட்கங்கெட்ட முறையில் தங்களது கட்சிகளின் அல்லது கூட்டணிகளின் தேசியப்பட்டியலுக்குள் புகுந்துவிட்டார்கள்.

ஜனாதிபதித் தேர்தலில் பாரம்பரிய அரசியல் கட்சிகளின் வேட்பாளர்களை நிராகரித்து தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்கவை மக்கள் ஜனாதிபதியாக தெரிவு செய்யாமல் விட்டிருந்தால் இந்த அரசியல்வாதிகளில் எவரும் பாராளுமன்றத் தேர்தலில் இருந்து ஒதுங்குவது குறித்தோ அல்லது அரசியலில் இருந்து ஓய்வு பெறுவது குறித்தோ ஒரு போதும் சிந்தித்திருக்கவே மாட்டார்கள்.

ஜனாதிபதி தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் வெற்றி இலங்கை அரசியலில் ஓய்வு என்ற ஒரு புதிய அம்சத்தை அறிமுகப்படுத்தியிருப்பதாகவும் அல்லாவிட்டால் அரசியல்வாதிகள் தோல்வி கண்டால் அல்லது இறந்தால் மாத்திரமே அவர்களின் ஓய்வைக் கண்ட ஓர் ஆரோக்கியமற்ற அரசியல் கலாசாரமே இலங்கையில் நீடித்து வந்ததாகவும் ஜனாதிபதி திசாநாயக்கவும் தேசிய மக்கள் சக்தியின் பல தலைவர்களும் பெருமையுடன் கூறுகிறார்கள்.

நாட்டின் சமூக, அரசியல், பொருளாதார நெருக்கடிக்கு காரணமான ஜனாதிபதிகளுக்கு உறுதுணையாகச் செயற்பட்ட பலர் எதிர்க்கட்சிகளின் வேட்பாளர்கள் பட்டியலில் இடம்பெறுகிறார்கள். ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் கூறிய செய்தியை அவர்கள் தெளிவாகப் புரிந்து கொள்ளவில்லைப் போலும். தவறான ஆட்சிமுறைக்கும் ஊழல் மோசடிகளுக்கும் உறுதுணையாகச் செயல்பட்ட எஞ்சிய அரசியல்வாதிகளையும் அரசியல் பக்கமே இனிமேல் அவர்கள் திரும்பிப்பார்க்கவே நினைக்காத முறையில் பாராளுமன்ற தேர்தலில் தோற்கடித்து வீட்டுக்கு அனுப்புவதற்கு பாராளுமன்ற தேர்தலை மக்கள் பயன்படுத்த வேண்டும். இது தெற்கிற்கு மாத்திரமல்ல, வடக்கு, கிழக்கிற்கும் பொருந்தும்.

## "வெள்ளைப் பிரம்புக்கு மதிப்பளிப்போம் பார்வையற்றோருக்கு கரம்கொடுப்போம்"






யாழ்ப்பாணம், ஒக். 17
ஒக்டோபர் 15 ஆம் திகதி சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தை முன்னிட்டு, மக்களிடையே வெள்ளைப் பிரம்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக "வெள்ளைப் பிரம்புக்கு மதிப்பளிப்போம் பார்வையற்றோருக்குக் கரம் கொடுப்போம்" என்ற தலைப்பில் துண்டுப் பிரசுரம் ஒன்றை கருவி நிறுவனம் வெளியிட்டுள்ளது. (எ)

## மன்னார் சவேரியார் கல்லூரி மாணவி ஒலிம்பியாட் போட்டியில் 2ஆம் இடம்

மன்னார், ஒக். 17
கல்வி அமைச்சால் நடத்தப்பட்ட தேசிய விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் மன்னார் புனித சவேரியார் மகளிர் கல்லூரி மாணவி நயோலின் அபிரியானா இரண்டாம் இடத்தை பெற்றுக் கொண்டுள்ளார்.

இவர், யாழ். இந்து கல்லூரியில் நடைபெற்ற மாகாண மட்ட போட்டியில் முதலாம் இடத்தை பெற்றவர்.

அதேவேளை, மகரகம ஜனாதிபதி கல்லூரியில் கடந்த ஓகஸ்ட் 3ஆம் திகதி நடைபெற்ற தேசிய மட்ட போட்டியில் இரண்டாம் இடத்தை தனதாக்கியவர்.

மேலும், இவர் 2018ஆம் ஆண்டு தேசிய மட்டத்தில் நடைபெற்ற ஆங்கில பாராயணம் போட்டியில் முதலாம் இடத்தை பெற்றுக் கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. (அ)




## கிளிநொச்சியில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் இருவருக்கு புதிய வீடு

கிளிநொச்சி, ஒக். 17
கிளிநொச்சியில் இராணுவத்தினரால் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் பயனாளிகளிடம் நேற்று கையளிக்கப்பட்டன.

இராணுவத்தின் 75 ஆவது தினத்தை முன்னிட்டு இந்த வீடுகள் கையளிக்கப்பட்டன. குறைந்த வருமானம் பெறும் 2 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு இராணுவத்தினரால் வீடுகள் கையளிக்கப்பட்டன.

கிளிநொச்சி - கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பரந்தன், சிவபுரம் பகுதியில் வருமானம் குறைந்த 05 பேர் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு நிர்மா ணிக்கப்பட்ட வீடு அதன் உரிமையாளரிடம் நேற்றுக் காலை 9 மணியளவில் கையளிக்கப் பட்டது.

தொடர்ந்து கரைச்சி பிர்தேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பன்னங்கண்டி கிராமத்தில் இராணுவத்தில் பணியாற்றும் கணவன் மற்றும் மனைவியைக் கொண்ட குடும்பத்துக்காக



நிர்மாணிக்கப்பட்ட வீடு காலை 10 மணியளவில் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டது.


இராணுவத்தின் உயர் அதிகாரி விக்கும் லியனகே, இராணுவத்தினர் மற்றும் பொது மக்கள் பயனாளிகள் எனப் பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (எ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒக்ரோபர் - 17 வியாழக்கிழமை
குரோதி வருடம் - புரட்டாதி 31
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : பவுர்ணமி




**மேடம்**
விடாப்பிடியாக செயல் பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் மறைமுக தொந்தரவுகள் வந்து நீங்கும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**இடபம்**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும்.

**மிதுனம்**
உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார். சாதித்துக் காட்டும் நாள்.

**கடகம்**
குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எந்த காரியத்தை தொட்டாலும் இரண்டு மூன்று முறை முயன்று முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். பொறுமைத் தேவைப்படும் நாள்.

**கன்னி**
கடினமான காரியங்களையும் எளிதாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் ஆதாயமும் உண்டு. திறமைகள் வெளிப்படும் நாள்.

**துலாம்**
கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**விருட்சிகம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உதவுவார்கள். எதிலும் தெளிவு பிறக்கும் நாள்.

**தனுசு**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். சகோதரி உதவுவார். வியாபாரம் தழைக்கும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**மகரம்**
துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்றுத் தீரும். உத்தியோகத்தில் உங்கள் கருத்துக்கு ஆதரவு பெருகும். தைரியம் கூடும் நாள்.


**கும்பம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கும். நேர்மறை எண்ணங்கள் பிறக்கும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். அலுவலகத்தில் மரியாதை கூடும். நன்மை நடக்கும் நாள்.

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் அனாவசிய பேச்சை தவிர்ப்பது நல்லது. வியாபாரத்தில் வாடிக்கையாளர்களுடன் சச்சரவுகள் வரும். உத்தியோகத்தில் அலுவலக ரகசியங்களை வெளியிட வேண்டாம்.

# ஆபத்தான நிலையில் இரண்டு பாலங்கள்!

## முல்லைத்தீவு மக்கள் விசனம்





முல்லைத்தீவு, ஒக். 07

முல்லைத்தீவு பரந்தன் ஏ-35 வீதியில் உள்ள வட்டுவாகல் பாலம் மற்றும் புளியம்பொக்கணைப் பாலம் ஆகிய இரு பாலங்களும் பல ஆண்டுகளாக புனரமைக்கப்படாது ஆபத்தான நிலையில் காணப்படுவதனால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுவதுடன் உயிரிழப்புக்களும் இடம்பெற்று வருகின்றன.

முல்லைத்தீவு பரந்தன் ஏ-35 வீதியில் மிக நீண்ட காலமாக காணப்படும் வட்டுவாகல் பாலம் கடந்த 2009 ஆம் ஆண்டுக்கு முன்னரான யுத்தம், 2004 ஆம் ஆண்டுக்கான ஆழிப்பேரலை அனர்த்தம் என்பவற்றால் கடுமையாக சேதத்துக்கு உள்ளாகியது.

தற்போது குறித்த பாலத்தில் சிறு சிறு திருத்த வேலைகள் செய்யப்பட்டு போக்குவரத்துக்கு பயன்படுத்தப்பட்டது

இந்த பால திருத்தப் பணிகளின் அவசியம் தொடர்பில் கடந்த 2013ஆம் ஆண்டு முதல் முல்லைதீவு மாவட்டத்தில் நடைபெறுகின்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் மற்றும் மாகாண சபை ஆகியவற்றில் நடந்த கலந்துரையாடல்களிலும் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

கடந்த காலங்களில் அதற்கான அமைச்சரவை தீர்மானங்களும் கொண்டு வரப்பட்ட நிலையில் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இவ்வாறான நிலையில் குறித்த பாலத்தின் பல இடங்களில் உடைவுகள் ஏற்பட்டு சேதமடைந்து ஆபத்தான நிலையில் காணப்படுகின்றது.

இதனால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுவதுடன் உயிரிழப்புகள் நிகழ்ந்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

எனவே, ஏ-9 வீதிக்கு அடுத்தபடியான போக்குவரத்து பாதையாகவும் வடக்கு மாகாணத்தையும் கிழக்கு மாகாணத்தையும் இணைக்கும் போக்குவரத்து பாதையாகவும் உள்ள குறித்த வீதியிலுள்ள இரு பாலங்களையும் அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# யாழ். செயலகத்தில் சமுர்த்தி வங்கிகளின் கணக்காய்வு மற்றும் முன்னேற்ற மீளாய்வு

யாழ்ப்பாணம், ஒக். 17

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சமுர்த்தி வங்கிகளின் கணக்காய்வு மற்றும் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டமானது பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் அவர்களின் தலைமையில் நேற்று முன் தினம் காலை 09.00 மணிக்கு யாழ்ப்பாண மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போது கருத்து தெரிவித்த அரசாங்க அதிபர், யாழ்ப்பாண மாவட்டத்தில் 33 சமுர்த்தி வங்கிகள் இயங்கி வருவதாகவும், சமுர்த்தி வேலைத்திட்டத்திலிருந்த நிவாரண வழங்கல் விடுவிக்கப்பட்டு நலன்புரி நன்மைகள் திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளதாகவும், வங்கிகளின் நுண்நிதி செயற்பாடுகள் தொடர்பாக எழும் ஐயவினாக்கள் மீது அதிக கவனம் செலுத்தவேண்டும் எனவும், தற்போது எமது யாழ்ப்பாண மாவட்டம் சமுர்த்தி வங்கிச் செயற்பாடுகளில் தேசிய அளவில் முன்னணி வகிப்பதாகவும் அதற்கு சமுர்த்தி சார்ந்த அலுவலர்களின் ஒத்துழைப்பிற்கு தமது நன்றியினையும் தெரிவித்தார். மேலும் மக்களின் வறுமையினை குறைத்து அவர்களின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு சமுர்த்தி முகாமையாளர்கள், உத்தியோகத்தர்கள் மேன்மேலும் வினைத்திறமையாக செயற்படவேண்டும் எனவும் அரசாங்க அதிபர் கேட்டுக்கொண்டார்.



இக் கலந்துரையாடலில் மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர், கணக்காளர், சமுர்த்தி முகாமையாளர்கள் (தலைமைப்பீடம்), வங்கி முகாமையாளர்கள், மாவட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ-05)

# கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ கலந்துரையாடல்

கிளிநொச்சி, ஒக். 17

கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ கலந்துரையாடல், மாவட்ட பதில் அரசாங்க அதிபர் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இதன்போது கிளிநொச்சி மாவட்டத்தில் அனர்த்த நிலைமைகளை குறைக்கும் வகையில் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய வேலைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

மேலும் பருவ மழை ஆரம்பித்திருப்பதால் உயர்தரப் பரீட்சை மற்றும் தேர்தல் ஆகியவற்றில் முன்னெடுக்கப்பட வேண்டிய வேலைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இன்றைய கலந்துரையாடலில் பிரதேச செயலர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கம் திருடர்களை கைது செய்ய வேண்டும்!

## சரத் வீரசேகர வேண்டுகோள்

கொழும்பு, ஒக். 17

**நாட்டில் திருடர்களை கைது செய்வதாக உறுதியளித்த அரசாங்கம் அதனை செய்ய வேண்டும் என பொதுஜன பெரமுனவின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர வேண்டுகோள் விடுத்துள்ளார்.**



கட்சியின் தலைமையகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இந்த வேண்டுகோளை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் திருடர்களை கைதுசெய்வதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உறுதியளித்திருந்தார். எனினும் அதனை அவர் இன்னும் செய்யவில்லை. மக்கள் அதனைத் தான் எதிர்பார்க்கிறார்கள்.

பாராளுமன்றத்துக்கு நாட்டை நேசிக்கும் நபர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும். அரசியலமைப்பையும் பௌத்த மதத்தையும் பாதுகாக்கக்கூடியவர்கள் அவசியம். அதனாலேயே நாம் இந்தத் தேர்தலில் போட்டியிடுகிறோம்.

நாட்டை நேசிக்கக் கூடிய சிறந்த குழு எமது கட்சியின் சார்பாக தேர்தலில் போட்டியிடுகிறது-என்றார்.

(அ)

# எதிர்வரும் 27, 31 மற்றும் நவம்பர் 03 வாக்காளர் அட்டைகள் விநியோகம்

கொழும்பு, ஒக். 17

எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கான உத்தியோகபூர்வமான வாக்காளர் அட்டைகள் எதிர்வரும் 27, 31 மற்றும் நவம்பர் 03 ஆகிய திகதிகளில் வழங்கப்படும் என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நவம்பர் 7 ஆம் திகதிக்குப் பின்னர் வாக்காளர் அட்டைகள் கிடைக்கப் பெறாத வாக்காளர்கள் தங்களது பிரதேசங்களில் உள்ள தபால் அலுவலகங்களுக்குச் சென்று உத்தியோகபூர்வமான வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என தேர்தல் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு ஒக்ரோபர் 30, நவம்பர் 01 மற்றும் 04 ஆம் திகதிகளில் அனைத்து மாவட்ட செயலகங்கள் மற்றும் தேர்தல் அலுவலகங்களில் நடைபெறவுள்ளது.

மැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission

குறித்த திகதிகளில் தபால் மூல வாக்குகளை அடையாளப்படுத்த முடியாதவர்கள் நவம்பர் 07 மற்றும் 08 ஆம் திகதிகளில் அதனை மேற்கொள்ள முடியும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

(அ)

# வெளிநாட்டுப் பிரஜைகள் 10 பேர் சி.ஐ.டியால் கைது!

கொழும்பு, ஒக். 17

ஹலவத்தை பிரதேசத்தில் உள்ள பிரதான சுற்றுலா விடுதி ஒன்றில் சந்தேகத்திற்கிடமான முறையில் தங்கியிருந்த வெளிநாட்டு பிரஜைகள் 10 பேரை, புத்தளம் பிரிவு குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கைது செய்து ஹலவத்தை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட 08 ஆண்களும் இரண்டு பெண்களும் எத்தியோப்பியா, சீனா, மலேசியா மற்றும் கொரிய பிரஜைகள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 282 கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் 20 கணனிகள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(அ)

# ஈஸ்டர் தாக்குதல்களுக்கான நியாயம் கிடைக்கப்பெறுமா?

## கேள்வி எழுப்புகிறார் ஹர்ஷண ராஜகருணா

கொழும்பு, ஒக். 17

புதிய அரசாங்கத்தின் ஊடாக உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கான நியாயம் கிடைக்கப்பெறுமா என சந்தேகம் எழுந்துள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷண ராஜகருணா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், முன்னர் விசாரணைகளை மேற்கொண்ட அதிகாரிகளை சேவையில் இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் கூறினர். அது வரவேற்கத்தக்க விடயமாகும்.



இருப்பினும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்த விடயத்தில் நியாயம் கிடைக்கப் பெறுமா என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் இன்னமும் காணப்படுகின்றது. தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஒரு மாத காலம் கடந்துள்ளது. ஆனால் அதற்கான நியாயம் கிடைக்கப்பெற்றதாக தெரியவில்லை.

ஆனால் தேசிய மக்கள் சக்தியினர் அவர்களின் அரசாங்கம் ஆட்சிக்கு வந்தமையை தொடர்ந்து ஒரு வாரத்திற்குள் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடையவர்களுக்கு தண்டனையை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கூறினர். ஆனால் அந்த விடயம் இடம்பெற்றதாக தெரியவில்லை. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி நியாயத்தை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்-என்றார்.

(அ)

# சீரற்ற காலநிலையால் 159,547 பேர் பாதிப்பு!

கொழும்பு, ஒக். 17

நாட்டில் கடந்த ஒரு வாரமாக நிலவிய மழையுடனான காலநிலை காரணமாக ஏற்பட்ட வெள்ளம், காற்று மற்றும் மண் சரிவு என்பவற்றால் 13 மாவட்டங்களில் 40 ஆயிரத்த 768 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 59 ஆயிரத்து 547 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அவர்களில் 2 ஆயிரத்து 433 குடும்பங்களைச் சேர்ந்த 10 ஆயிரத்து 361 பேர் 80 தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் எனவும், 380 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

வெள்ளைப் பிரம்பு தின வாரம்

# ஜனாதிபதியின் செயலருக்கு முதலாவது கொடி அணிவிப்பு

கொழும்பு, ஒக். 17

சர்வதேச வெள்ளைப் பிரம்பு பாதுகாப்பு தினத்துடன் இணைந்ததாக, கொடி விற்பனை வாரத்தை முன்னிட்டு நேற்று முன் தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவுக்கு முதல் கொடி அணிவிக்கப்பட்டது.

இலங்கை பார்வையற்ற பட்டதாரிகள் சபையின் தலைவர் சுகத் வசந்த டி சில்வா ஜனாதிபதியின் செயலாளருக்கு கொடியை அணிவித்தார்.

கொடி விற்பனை மூலம் கிடைக்கும் வருமானத்தில் பார்வையற்ற மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்குவதுடன் அவர்களின் நலனுக்கான வசதிகள் செய்து கொடுக்கப்படும் என சங்கத்தின் தலைவர் குறிப்பிட்டார்.

பின்னர், இலங்கை பார்வையற்ற பட்டதாரி சபை உறுப்பினர்களுடன் சமூகமான கலந்துரையாடலில் ஈடுபட்ட ஜனாதிபதியின் செயலாளர், அவர்கள் முன்வைத்த பிரச்னைகள் குறித்தும அவதானம் செலுத்தியதுடன், எதிர்காலத்தில் அவற்றுக்கு தீர்வு வழங்குவது குறித்து ஆராய்வதாகவும் தெரிவித்தார்.

இலங்கை பார்வையற்ற பட்டதாரிகள் சபையின் செயலாளர் சமோத் நயனாநந்த மற்றும் சங்கத்தின் அதிகாரிகள் குழுவினர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

(அ)

# 77 ஆவது சுதந்திர தின நிகழ்வுக்கு ஏற்பாடுகள் முன்னெடுக்க அனுமதி

கொழும்பு, ஒக். 17

77 ஆவது சுதந்திரதினக் கொண்டாட்டத்துக்கான ஏற்பாடுகளை முன்னெடுக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

77ஆவது சுதந்திரதினத்தை நடத்துவதற்குத் தேவையான கண்காணிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.



ஜனாதிபதியின் தலைமையில் அமைச்சுக்கள், திணைக்களங்கள், முப்படையினர் மற்றும் பொலிஸ் திணைக்களம் உள்ளிட்ட நிறுவனங்களின் பிரதானிகளின் பங்கேற்புடன் வழிநடத்தல் குழுவொன்றை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நீதி, பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது-என்றார்.

(அ)

# ஓய்வூதியர்களுக்கான கொடுப்பனவு அதிகரிப்பு

கொழும்பு, ஒக். 17

அடுத்த மாதம் முதல் ஓய்வூதியத்துடன் 3,000 ரூபா சேர்க்கப்படும் என அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

இந்த தொகையை ஒக்ரோபர் மாதத்திற்கான இடைக்கால கொடுப்பனவாக வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அவர் கூறினார்.

இந்த மாதத்திற்கான இந்த மேலதிக கொடுப்பனவை எதிர்வரும் நாட்களில் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

அனைத்து ஓய்வூதியதாரர்களுக்கும் மாதாந்த இடைக்கால கொடுப்பனவாக 3000 ரூபாவை அடுத்த வாரம் முதல் வழங்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நிதி அமைச்சின் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்திருந்தார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசியப் பரப்பில் பயணிப்பவர்கள் மக்களுக்காக இணையவேண்டிய தேவை!

## தமிழரசு வேட்பாளர் ஞா.சிறிநேசன்

மட்டக்களப்பு, ஒக். 17

**தமிழ் தேசியப் பரப்பில் பயணப்பவர்கள் மக்களுக்காக எதிர்காலத்தில் இணைய வேண்டிய தேவை உள்ளது என இலங்கை தமிழரசுக் கட்சி வேட்பாளர் ஞா.சிறிநேசன் தெரிவித்துள்ளார்.**

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் மக்களின் தீர்ப்பு சிலவேளைகளில் தமக்கு நல்ல பாடங்களை புகட்டக்கூடும் எனவும், தேர்தல் முடிந்த பின்னர் தமிழ் தேசிய கட்சிகள் மீண்டும் இணையலாம் எனவும் சிறிநேசன் மேலும் தெரிவித்தார்.

நேற்று முன் தினம் இரவு டான் செய்திகளில் ஒளிபரப்பான தேர்தல் கால சிறப்பு யாவரும் கேளிர் நிகழ்சியில் அவர் இதனைத் தெரிவித்தார்.

நேற்றைய யாவரும் கேளிர் நிகழ்சியில் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி வேட்பாளர் பா.கஜதீபனும் கலந்துகொண்டார்.

தேர்தல் கால சிறப்பு யாவரும் கேளீர் நிகழ்ச்சி, டான் செய்திகள் அலை வரிசையில் தினமும் இரவு 7.00 நேரலையாக ஒளிபரப்பாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# தமிழ் தேசியத்திற்காக வாக்களிக்வேண்டும்!

## அரியநேத்திரன், யோகேஸ்வரன் அழைப்பு

மட்டக்களப்பு, ஒக். 17

தமிழ்த் தேசியத்தைச் சாரதார்களை தமிழ் மக்கள் நிராகரிக்க வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், சீ.யோகேஸ்வரன் ஆகியோர் வலியுறுத்தியுள்ளனர்.

தமிழ் மக்கள்,தமிழ்த் தேசியம் சார்ந்த நபர்களை மட்டும், எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் தெரிவு செய்ய வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

மட்டக்களப்பில் போட்டியிடும் தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஞா. சிறீநேசனை ஆதரித்து நேற்று முன் தினம் மாலை நடைபெற்ற பிரசாரக் கூட்டத்திலேயே அவர்கள் இவ்வாறு வலியுறுத்தினர்.

(அ)

# வடக்கிலிருந்து பெண் பிரதிநிதி பாராளுமன்றம் செல்லவேண்டும்

## மிதிலைச்செல்வி வேண்டுகோள்



யாழ்ப்பாணம், ஒக். 17

வடமாகாணத்தில் இருந்து இம்முறை பாராளுமன்றத்துக்கு பெண் பிரதிநிதி ஒருவர் செல்ல வேண்டியது காலத்தின் கட்டாயம் என தமிழ் மக்கள் கூட்டணியின் பெண் வேட்பாளர் திருமதி மிதிலைச் செல்வி சிறீ பத்மநாதன் வேண்டுகோள் விடுத்தார்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்களை சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை பாராளுமன்றத்தில் பெண் பிரதிநிதித்துவம் குறைவடைந்து செல்கின்ற நிலையில் கடந்த தேர்தலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சார்ந்து எந்த ஒரு பெண் வேட்பாளரும் பாராளுமன்றம் செல்லாதது துரதிஷ்டமான சம்பவம்.

ஏனெனில் வடக்கு-கிழக்கு யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசம். பெண்கள் பல்வேறு பிரச்னைகளுக்கு முகம் கொடுத்து வருகின்ற நிலையில் அவர்களுக்கு குரல் கொடுப்பதற்கு பெண் பிரதிநிதி ஒருவர் பாராளுமன்றத்தில் இல்லை.

ஆண் பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் இருந்தாலும் அவர்கள் பேசவேண்டும் என்பதற்காக பெண்கள் பிரச்னைகளை கூறுவார்கள், அத்தோடு அவர்களின் நடவடிக்கை முடித்துவிடும்.

தமிழ் கட்சிகளைப் பொறுத்தவரை ஆளுமை மிக்க பெண்களை சந்தர்ப்பம் வழங்குவது அருகி வரும் நிலை காணப்படுகிறது. ஏன் இதை நான் கூறுகிறேன் என்றால் திறமையான பெண்களை நிறுத்தினால் பாராளுமன்றம் சென்று விடுவார்கள். அதே கட்சியில் போட்டியிடும் ஆண் வேட்பாளர்களுக்கு பாதகமாக அமைந்து விடும் எனச் சிந்திக்கிறார்கள்.

அவ்வாறான மனநிலையில் இருந்து கட்சிகள் மாற வேண்டும். பெண்களுக்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டும். தகுதியான-திறமையான பெண்கள் வேட்பாளராக நிறுத்தப்பட வேண்டும். மக்கள் அவர்களுக்கு ஆணை வழங்குவார்கள்.

ஆகவே வடக்கு-கிழக்கு தமிழ் மக்கள் சார்ந்து பெண் பிரதிநிதி ஒருவரை பாராளுமன்றம் அனுப்புவதற்கு பெண்கள் முன்வருவதோடு ஆண்களும் அதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்-என்றார்.

(அ-05)

# தெற்கின் அலையில் நாம் சிக்கிவிடாது இனத்தின் இருப்பை உறுதி செய்வோம்

## ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வேட்பாளர் மயூரன்

வவுனியா, ஒக். 17

தெற்கின் மாற்றம் என்ற வரயறைக்குள் தமிழ் மக்களின் தேவைகளை அடகு வைக்காமல் தமிழ்த் தேசிய இனத்தின் இருப்பை மனதில் நிறுத்தி வாக்களிக்குமாறு முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினரும் ஜனநாயக தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட வேட்பாளருமான செந்தில்நாதன் மயூரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-

தெற்கில் இன்று அரசியல் மாற்றம் ஒன்று உருவாகியுள்ளது. அந்த மக்கள் மாற்றம் ஒன்றின் அவசியத்தை உணர்ந்து அநுரவை ஆட்சியில் அமர்த்தியுள்ளனர்.வடக்கு-கிழக்கிலும் அவ்வாறான ஒரு மாற்றம் வர வேண்டும் என்று பலரும் சிந்திக்கின்றார்கள். அந்த மாற்றத்திற்குள் பல விடயங்கள் இருக்கின்றன.

நாடு பொருளாதார சிக்கல்களுக்கு முகம் கொடுத்து ஊழல் வாதிகளால் சூறையாடப்பட்டுள்ளது. அந்த வகையில் நாட்டில் ஒரு புதிய யுகத்தை ஏற்படுத்துவதற்காக சிங்கள மக்கள் ஒன்றிணைந்துள்ளனர். அதனை நாம் வரவேற்கின்றோம். அதற்கான பங்களிப்புக்களை வழங்குவதற்கு நாங்களும் தயாராக இருக்கிறோம்.

இதேவேளை தெற்கு சிங்கள மக்கள் விரும்புகின்ற மாற்றமும் வடக்கு-கிழக்கு தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களும் ஒன்றல்ல. இரண்டையும் நாம் ஒரே கண்ணோட்டத்தில் பார்க்க முடியாது. இலஞ்சத்தையும் ஊழலையும் அகற்றினால் தமிழ் மக்கள் நிம்மதியாக வாழமுடியுமா. அல்லது அதனை மாத்திரம் நாம் மாற்றம் என்று கூறமுடியுமா?

இன்று வடக்கு-கிழக்கு தமிழர் பகுதிகளில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட இனப்பரம்பல் செயற்பாடுகள் தமிழ்ப் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. சமகாலத்தில் திருகோணமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் ஒரு தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை பெறுவதே கடினம் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

வன்னி மாவட்டத்திலும் இந்த நிலையை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் திரைமறைவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எனவே தமிழ் மக்களின் இருப்பையும் பிரதிநிதித்துவத்தையும் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு எம் அனைவர் முன்னும் இருக்கிறது. இது தொடர்பாக நாம் ஆழ்ந்து சிந்திக்கவேண்டும்.

ஏற்கனவே அதிகளவான தமிழ் மக்கள் புலம் பெயர்ந்து சென்றுள்ளமையால் தமிழ் பிரதிநிதித்துவம் குறைவடைந்து செல்லும் நிலைமையை காண்கின்றோம். இந்நிலையில் மாற்றத்தினை விரும்பி நீங்கள் அளிக்கின்ற வாக்குகளால் எமது பாரம்பரிய பிரதேசங்களில் இருந்து சிங்கள பிரதிநிதிகளே பாராளுமன்றுக்குச் செல்வர். அவர்களுக்கு தமிழர்களின் பிரதான பிரச்னைகளே தெரியாது. அவர்கள் எமக்காக பேசுவார்கள் என நம்பமுடியுமா?

எனவே தெற்கில் ஏற்பட்ட மாற்றத்திற்கான அலையில் தமிழ் மக்கள் சிக்கிவிடாது தமிழ்ப்பிரதேசங்களின் இருப்புக்களையும், பிரதிநிதித்துவத்தையும் பாதுகாக்கவேண்டிய அவசியத்தை உணரவேண்டும்-என்றார்.

(அ)

# யாழ் வணிகர் கழகத்தை சந்தித்த ஜனநாயக தமிழரசு வேட்பாளர்கள்

யாழ்ப்பாணம், ஒக். 17

எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தலைமையில் சுயேச்சைக் குழுவாக போட்டியிடும் ஜனநாயக தமிழரசுக் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் நேற்று முன் தினம் யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தை சந்தித்து கலந்துரையாடினர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றது.

இந்த சந்திப்பில், ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா, யாழ்ப்பாணம் வணிகர் கழக தலைவர் இ.ஜெயசேகரம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், வணிகர் கழக அங்கத்தவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

(அ)

# ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை வேட்பாளர் அறிமுகம் காரைதீவில்!

அம்பாறை, ஒக். 17

ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பு சார்பில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களின் அறிமுக நிகழ்வு காரைதீவு விபுலானந்தா கலாச்சார மண்டபத்தில் நேற்று புதன்கிழமை காலை நடைபெற்றது.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அம்பாறை மாவட்ட இணைப்பாளர் ஹென்றி மகேந்திரன் தலைமையில் இவ் அறிமுகக் கூட்டம் நடைபெற்றது.



அம்பாறையில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிடும் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும் நாவிதன்வெளி பிரதேச சபை முன்னாள் தவிசாளருமான [illegible] காமத்தம்பி வேலுப்பிள்ளை, கிருஷ்ணபிள்ளை லிங்கேஸ்வரன், சிந்தாத்துரை துரை சிங்கம், சுப்பிரமணியம் தவமணி, தியாகராஜா கார்த்திக், ராஜகுமார் பிரகாஷ் ,செல்லத்தம்பி புகனேஸ்வரி, பாலசுந்தரம் பரமேஸ்வரன் ஆகியோர் சுயஅறிமுகம் செய்து உரையாற்றினர்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப ஆட்சி பற்றி பேசிய அனுர தரப்பின் வேட்புமனுக்களில் குடும்ப அங்கத்தவர்கள்!

## இதுவா இளைஞர்கள் எதிர்பார்த்த மாற்றம் என்கிறார் நிமல் லான்சா

கொழும்பு, ஒக். 17

**ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின்போது குடும்ப ஆட்சி பற்றி பேசிய தேசிய மக்கள் சக்தியின் வேட்புமனு பெயர்பட்டியல்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு உறுப்பினர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனர். இளைஞர் யுவதிகள் எதிர்பார்த்த மாற்றம் இதுவா என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா கேள்வியெழுப்பினார்.**



நீர்கொழும்பிலுள்ள தேர்தல் அலுவலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேசிய மக்கள் சக்திக்கே மக்கள் அதிகாரத்தை வழங்க வேண்டும். ஆனால் அதற்குரிய பலமான எதிர்க்கட்சி அவசியமாகும். மக்களிடம் கூறியவற்றைத் தேசிய மக்கள் சக்தி செய்யவில்லை. முறைமையில் மாற்றம் வேண்டும் என்பதற்காக இளைஞர், யுவதிகள் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தனர். ஆனால் அவர்கள் எதிர்பார்த்த எந்தவொரு முறைமை மாற்றமும் இடம்பெறவில்லை.

அரச நியமனங்களும் தகுதியானவர்களுக்கு வழங்கப்படவில்லை. மாறாகத் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களுக்கே வழங்கப்படுகின்றன. இளைஞர்களுக்கு இடமளிப்பதாகக் கூறினார்கள். எந்தவொரு நியமனமும் இளைஞர்களுக்கு வழங்கப்படவில்லை. எனவே பொதுத் தேர்தலின்போதாவது மக்கள் இது தொடர்பில் சிந்திக்கவேண்டும்.

தேசிய மக்கள் சக்தி தமது தேர்தல் பிரசார மேடைகளில் குடும்ப ஆட்சி குறித்து பேசினர். ஆனால் தற்போது பொதுத் தேர்தலில் போட்டியிடவுள்ள எந்தவொரு எதிர்க்கட்சியிலும் குடும்ப அங்கத்தவர்கள் போட்டியிடவில்லை. ஆனால் தேசிய மக்கள் சக்தியின் வேட்புமனு பட்டியலில் குடும்ப அங்கத்தவர்கள் உள்ளனர். ஏனைய அரசியல் கட்சிகளுக்கும் அப்பால் சென்று இவர்கள் செயற்படுகின்றனர்.

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் ஜனாதிபதி என்பதால் அவருக்கு அதிகாரத்தை வழங்குங்கள். ஆனால் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வழங்கவேண்டாம். பாராளுமன்றத்தில் மக்களுக்காகக் குரல் கொடுக்கக் கூடிய பலமான எதிர்க்கட்சியை மக்கள் தெரிவு செய்யவேண்டும். எமக்குள் எவ்வித முரண்பாடுகளும் இல்லை. ஆனால் ஐக்கிய மக்கள் சக்திக்குள் பாரிய முரண்பாடு காணப்படுகிறது-என்றார். (அ)

# ஷானி அபேசேகரவின் நியமனம் அரசியல் உள்நோக்கம் உடையது

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 17

முன்னாள் பிரதிப்பொலிஸ்மா அதிபர் ஷானி அபேசேகர குற்றப் பிரிவின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டமை அரசியல் உள்நோக்கம் கொண்ட செயல் என ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா நேற்று தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலின் போது தேசிய மக்கள் சக்தியின் மேடையில் தோன்றிய ஷானியின் நியமனம் அரசியல் உள்நோக்கம் கொண்ட ஒரு செயல் என அவர் சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும், ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்களுக்கு காரணமானவர்களை அவர் விரைவில் வெளிக்கொணருவார் என எதிர்பார்க்கிறோம் என அவர் மேலும் கூறினார்.

# அதிகளவு வாக்குகளால் சிலிண்டர் வெற்றி பெறும்

## ரமேஷ் பத்திரன நம்பிக்கை

கொழும்பு, ஒக். 17

பாராளுமன்ற தேர்தலில் வெற்றி பெறுவதற்காக பலமான அணியுடன் இணைந்து செயல்படுவதாக புதிய ஜனநாயக முன்னணியின் காலி மாவட்ட வேட்பாளர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.

காலியில் வைத்து ஊடகங்களுக்குத் தெரிவிக்கும்போதே இதனை கூறிய அவர், கடந்த தேர்தலில் புதிய வாக்கு தளம் கிடைத்தது என்று குறிப்பிட்டார்.

அத்துடன், குறித்த வாக்காளர் தளத்தை பலப்படுத்த பாடுபடுவதுடன், ஒவ்வொரு தொகுதியிலும் அதிக வாக்குகளைப் பெற குழுவாக, அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன என்றும் கூறினார்.

காலி மாவட்டம் பொதுத் தேர்தலுக்கு பலமான அணியை களமிறக்கியுள்ளதுடன், தொழில் வல்லுநர்கள் மற்றும் மக்கள் நட்புடன் கூடிய சிறந்த குழுவொன்று தேர்தலில் போட்டியிடுவதாகவும் அதிக வாக்குகளால் சிலிண்டர் வெற்றி பெறும் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

# தேர்தலை இலக்காக கொண்டு எமது புதிய பயணம் ஆரம்பம்

## சாகர காரியவசம் கூறுகிறார்

கொழும்பு, ஒக். 17

எதிர்வரும் பொதுத் தேர்தலை இலக்காகக் கொண்டு புதிய பயணத்தை தமது கட்சி ஆரம்பித்துள்ளதாக பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைமையகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் நடைபெற்று முடிந்த ஜனாதிபதி தேர்தலில் 58 வீதமான மக்கள் அநுர குமார திஸாநாயக்கவுக்கு எதிராக வாக்களித்துள்ளார்கள். அந்த 58 வீதத்தில் நாமும் இருக்கிறோம்.

எதிர்வரும் பொதுத் தேர்தலை இலக்காகக் கொண்டு புதிய பயணத்தை எமது கட்சி ஆரம்பித்துள்ளது. நாமல் ராஜ




பக்ஷ அம்பாந்தோட்டை மாவட்டத்தில் மாத்திரமல்லாது முழு நாட்டுக்கும் தலைமைத்துவம் வழங்க வேண்டும் என ஆதரவாளர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

அதற்கமையவே அவர் தேசியப் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளார். அவர் எமது கட்சிக்கு சிறந்த தலைமைத்துவத்தை வழங்கிக்கொண்டிருக்கிறார்-என்றார். (அ)

# பாராளுமன்றத் தேர்தலின் பின் தேசிய அரசு அமையவேண்டும்

## ரவூப் ஹக்கீம் கருத்து



கொழும்பு, ஒக். 17

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுக்க வேண்டுமாயின், பாராளுமன்றத் தேர்தலின் பின்னர் தேசிய அரசாங்கம் அமைக்கப்பட வேண்டுமென முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

கண்டியில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இவ்விடயம் தனது தனிப்பட்ட கருத்தென குறிப்பிட்ட அவர், ஐக்கிய மக்கள் சக்தி தலைமையும் இது தொடர்பில் தமது இணக்கத்தை வெளிப்படுத்துமென தாம் நம்புவதாகவும் கூறினார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஒரு பிரிவு என்ற வகையில் முஸ்லிம் காங்கிரஸ் ஏழு மாவட்டங்களில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து போட்டியிடுகிறது. கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் தனித்து போட்டியிடுகிறோம். இதன் மூலம் மேலும் 04 பாராளுமன்ற ஆசனங்களைப் பெறுவதே எமது நோக்கமாகும். பொதுத் தேர்தலில் பெரும்பான்மை பெறலாம். ஜனாதிபதித் தேர்தலிலிருந்து பாராளுமன்றத் தேர்தல் முற்றிலும் வேறுபட்டவை. விகிதாசார வாக்கு முறை நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர், நான்கு ஜனாதிபதித் தேர்தல்களில் மாத்திரமே ஜனாதிபதியாக வெற்றி பெற்ற கட்சி, பொதுத் தேர்தலில் குறைந்த பட்ச பெரும்பான்மையைப் பெற முடியாமல்போனது. தேசிய மக்கள் சக்தி இம்முறையும் குறைந்தபட்ச பெரும்பான்மையைப் பெறாதென்பது எனது நம்பிக்கை. தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் நியமனப் பட்டியலைப் பார்க்கும்போது, மக்களுக்குத் தெரிந்த பிரபல அரசியல் பிரமுகர்களின் எண்ணிக்கை குறைவு.

நாட்டின் ஜனநாயகம் வலுவாக இருக்கவேண்டுமாயின் வலுவான எதிர்க்கட்சி அவசியம். பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்ற ஆட்சியாளர்கள் நாட்டை எங்கு முன்னெடுத்தார்கள் என்பதை நாடு அறியும். மீண்டும் அப்படியொரு நிலை ஏற்படாதிருக்க வாக்காளர்கள் தங்கள் வாக்குகளை மிகவும் அவதானமாக பயன்படுத்துவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு-என்றார். (அ)

# வெற்றி பெற்றால் பாராளுமன்ற சலுகைகளை ஏற்கவேமாட்டேன்!

## ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளர் அறிவிப்பு

கொழும்பு, ஒக். 17

பாராளுமன்றத்தில் தேர்தலில் வென்றால், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் வழமையான சலுகைகளை பெறப்போவதில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் மாத்தறை மாவட்ட வேட்பாளர் ரெஹான் ஜயவிக்ரம உறுதியளித்துள்ளார்.

மொரவக்க மற்றும் தெனியாயவில் நடைபெற்ற கூட்டங்களின் போது, அவர் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் அல்லது வாகன அனுமதிப்பத்திரத்தை தாம் ஏற்கப்போவதில்லை என்று குறிப்பிட்ட அவர், அரசியலில் புதிய முகங்களின் தேவையையும் வலியுறுத்தியுள்ளார்.

தனிப்பட்ட நன்மைகளைப் பெறாமல் மக்களுக்கு சேவை செய்வதில் தாம் உண்மையாக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (அ)

# தேசிய மக்கள் சக்தியிலும் விருப்புவாக்கு நடைமுறை!

## கே.டி.லால்காந்த கூறுகிறார்

கொழும்பு, ஒக். 17

தேசிய மக்கள் சக்தியிலும் விருப்புவாக்கு அடிப்படையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவர் என கட்சியின் அரசியல் சபை உறுப்பினர் கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.

அண்மையில் கண்டியில் நடைபெற்ற கூட்டமொன்றில் அவர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியில் விருப்பு வாக்கு முறைமை கிடையாது என சமூக ஊடகங்களில் வெளியாகி வரும் தகவல்களுக்கு பதிலளிக்கும் வகையில் அவர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

இம்முறை பொதுத் தேர்தலில் வேட்பாளர்களின் விருப்பு வாக்கு எண்ணிக்கை அடிப்படையில் பாராளுமன்றத் தெரிவு இடம்பெறும் என அவர் குறிப்பிட்டார்.

விருப்பு வாக்கு எண்ணிக்கை என்பது தேர்தல் சட்டம் என அதற்கு புறம்பாக செயற்படப் போவதில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# ரூ.2 இலட்சம் இலஞ்சம் பெற்ற அரச உத்தியோகத்தர் கைது!

## மாறு வேடத்தில் வந்த இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு அதிகாரிகளிடம் மாட்டினார்

மட்டக்களப்பு, ஒக். 17

**மட்டக்களப்பில் காணி விவகாரம் தொடர்பில் இரண்டு இலட்சம் ரூபாய் இலஞ்சம் பெற்ற உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர் ஒருவர் செவ்வாய்க்கிழமை கல்லடி பகுதியில் வைத்து இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.**

காத்தான்குடி பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் காணி ஒன்றை கொள்வனவு செய்தமைக்கான வரி தொடர்பில் 2 இலட்சம் ரூபாய் பணத்தை இலஞ்சமாக குறித்த அதிகாரி கோரியுள்ளார்.

இதனையடுத்து காணிக் கொள்வனவு செய்தவர் கொழும்பிலுள்ள இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்துள்ளார். அவர்களின் ஆலோசனைக்கமைய சம்பவதினமான நேற்று முன்தினம் பகல் கல்லடியிலுள்ள உள்நாட்டு இறைவரித் திணைக்களப் பகுதியில் மாறு வேடத்தில் கொழும்பில் இருந்து வந்த இலஞ்ச ஊழல் ஒழிப்பு பிரிவினர் கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

இதன்போது காரியாலயத்துக்கு வெளியில் வைத்து குறித்த அதிகாரி 2 இலட்சம் ரூபாயை இலஞ்சமாக பெற்றுக் கொண்டபோது இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினரால் கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் அநுராதபுரத்தைச் சேர்ந்தவர் என தெரியவந்துள்ளது.

(எ)

# தேடுதலில் கடற்படையும் இணைவு



கல்முனை, ஒக். 17

மீன் பிடிப்பதற்காக சென்ற பெண்ணை முதலை இழுத்துச் சென்றது. இந்த நிலையில் குறித்த பெண்ணை தேடும் பணியில் பொலிஸாரும் கடற்படையினரும் ஈடுபட்டு வருகின்றனர்.

அம்பாறை, சவளக்கடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிட்டங்கி ஆற்றை அண்டிய பிரதேசமான சொறிக் கல்முனை புட்டியாறு பகுதியில் மீன் பிடித்துக்கொண்டிருந்த பெண்ணை முதலை இழுத்துச் சென்றதாக பொலிஸார் கூறினர்.

இந்த நிலையில் அந்தப் பெண் தொடர்பில் பொலிஸாருடன் இணைந்து கல்முனை கடற்படையினரின் படகும் சுழியோடிகளும் தேடுதலில் ஈடுபட்டுள்ளனர்.

இப்பிரதேசத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் மழை காரணமாக ஆறுகளில் நீர் அதிகரித்துள்ளது . காரைதீவு - மாவடிப்பள்ளி நீர் ஓடையில் வழமையாக முதலைகளின் நட மாட்டம் அதிகமாக இருக்கும் இவைகளும் மழை வெள்ளத்துடன் கிட்டங்கி ஆறு உட்பட பல இடங்களுக்கு இடம்பெ யர்ந்து வருகின்றன.

(எ)



# பாலர் பாடசாலையில் ஆசிரியர் தின நிகழ்வு

திருக்கோவில், ஒக். 17

திருக்கோவில் வலய பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான ஆசிரியர் தின நிகழ்வும், கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக சேவை செய்து ஓய்வுபெற்ற ஆசிரியர்களின் அளப்பரிய சேவை நலன் பாராட்டு நிகழ்வும் திருக்கோவில் காஞ்சிரங்குடா வள நிலையத்தில் திங்கட்கிழமை மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

திருக்கோவில் வலய முன்பள்ளி பாடசாலைகள் உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ. விவேகானந்தராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் சுஜாதா குலேந்திரகுமார் கலந்து சிறப்பித்தார்.

திருக்கோவில் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆர். உதயகுமார், மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ். நிமலரஞ்சன் மற்றும் பல விருந்தினர்களும் இந்த நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

(எ)

# வாசிப்பு மாதத்தையொட்டி விழிப்புணர்வு நடைபவனி



அக்கரைப்பற்று, ஒக். 17

தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் நேற்று முன்தினம் விசேட நிகழ்வுகள் நடைபெற்றன.

அதிபர் ஏ. எச். பௌஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வின்போது அக்கரைப்பற்று கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி எம். ஐ. எம். ஹனீபா விருந்தினராக கலந்து கொண்டார்.

நூலகப் பொறுப்பாளர் ஏ. எல். றினோஸின் நெறிப்படுத்தலின் கீழ் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதி அதிபர் என். எம். முகம்மட் ஸாலிஹ், உதவி அதிபர் எம். எம்.எஸ். றபா, ஆசிரியர்கள், நூலக உதவியாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது வாசிப்பின் அவசியம் குறித்து விழிப்புணர்வு நடைபவனி நடைபெற்றது. இதில் பாடசாலை மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கு பற்றினர். இந்த விழிப்புணர்வு நடைபவனி பாடசாலை வளாகத்தில் இருந்து ஆரம்பித்து அக்கரைப்பற்று நகரின் பல்வேறு பகுதிகளின் வீதிகள் வழியாக சென்றது.

இவ்விழிப்புணர்வு நடைபவனியின் போது வாசிப்பின் அவசியம் குறித்த துண்டுப் பிரசுரங்கள் மற்றும் கையேடுகள் என்பன மக்கள் மத்தியில் விநியோகிக்கப்பட்டன. வாசிப்பின் முக்கியத்தும் அடங்கிய பதாதைகளை மாணவர்கள் ஏந்தியவாறு வாசிப்பை தூண்டும் கோசங்களையும் எழுப்பிச் சென்றனர். இம்மாணவர்கள் அக்கரைப்பற்று மாநகர நூலகத்துக்கும் சென்று பார்வையிட்டனர்.

(எ)

# சிறுவர் துஷ்பிரயோகத்துக்கு எதிராக பாடசாலை மாணவி விழிப்புணர்வு

மட்டக்களப்பு, ஒக். 17

சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் போதைப்பொருள் பாவனைக்கு எதிராக விழிப்புணர்வு துவிச்சக்கர வண்டிப் பயணத்தை மேற்கொண்ட மட்டக்களப்பு காத்தான்குடியைச் சேர்ந்த மாணவி கௌரவிக்கப்பட்டார்.

காத்தான்குடியில் இருந்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக, கொழும்பு நோக்கித் துவிச்சக்கர வண்டிப் பயணத்தை வெற்றிகரமாக முன்னெடுத்த இந்த மாணவிக்கு காத்தான்குடியில் நேற்று முன்தினம் மாலை கௌரவமளிக்கப்பட்டது.

காத்தான்குடி எல்லையிலுள்ள நுழைவாயிலில் வைத்து மாணவியை மாலை அணிவித்து வரவேற்றனர். இதன் போது சமூக செயல்பாட்டாளர்கள் சிலரும் மாணவியை கௌரவித்தனர்.

காத்தான்குடி பத்ரியா வித்தியாலயத்தில் 10ஆம் தரத்தில் கல்வி கற்கும் பாத்திமா நதா எனும் மாணவி கடந்த திங்கட்கிழமை இவ் விழிப்புணர்வுப் பயணத்தை காத்தான்குடியிலிருந்து ஆரம்பித்திருந்தார். பிரதமரை சந்தித்து மகஜரொன்றையும் அவர் கையளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(எ)

# சதுரங்க போட்டியில் கல்முனை ஸாஹிரா மாணவன் சம்பியன்



கல்முனை, ஒக். 17

சதுரங்க போட்டியில் கல்முனை ஸாஹிரா மாணவன் மிஜ்வாத் சம்பியனாகியுள்ளார்.

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான சதுரங்கப் போட்டி கடந்த 12, 13 மற்றும் 14ஆம் திகதிகளில் மாலபே ராகுல மகளிர் பாடசாலையில் நடைபெற்றது.

இதில் கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையின் 17 மற்றும் 20 வயதுப் பிரிவு அணிகள் பங்குபற்றின.

இந்தப் போட்டியில் 17 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் ஏ. எஸ். ஏ. மிஜ்வாத் தான் பங்கேற்ற ஆறு போட்டிகளில் 5. 5 புள்ளிகளைப் பெற்று (5 வெற்றிகள், 1 சமநிலை) அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான போட்டியில் சம்பியனாகி கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளார்.

இப்போட்டியில் வெற்றி பெற்ற மற்றும் கலந்து கொண்ட மாணவர்களுக்கும், அவர்களுக்குப் பயிற்சியளித்து தயார்ப்படுத்தி அழைத்துச் சென்ற கல்லூரியின் சதுரங்க பயிற்றுவிப்பாளர் எஸ். எம். சுஹ்தான் மற்றும் கல்லூரியின் சதுரங்க பொறுப்பாசிரியர் எம். வை. எம். றகீப் ஆகியோருக்கும் அதிபர் எம். ஐ. ஜாபிர் பாராட்டுக்களையும் வாழ்த்துகளையும் தெரிவித்துள்ளார்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்விவகாரங்களில் தலையிட எந்தவித உரிமையும் இல்லை!

## ஐ. நாவுக்கான இந்திய தூதுவர் திட்டவட்டம்

புதுடில்லி, ஒக். 17

**இந்தியாவின் உள்விவகாரங்களில் தலையிட பாகிஸ்தானுக்கு எந்தவித உரிமையும் இல்லை என்று ஐ. நாவுக்கான இந்தியத் தூதுவர் எல்டோஸ் மத்தியூ புன்னூஸ் திட்டவட்டமாக தெரிவித்தார்.**

ஐ. நா. அவையில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், "பாகிஸ்தான் முன்வைக்கும் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் அனைத்தும் நிராகரிக்கப்படக் கூடியவை. இந்தியாவின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதற்குப் பதிலாக பாகிஸ்தான் அதன் உள்நாட்டு பிரச்னைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தியாவின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட பாகிஸ்தானுக்கு எந்தவிதமான தார்மீக உரிமையும் கிடையாது.

பாகிஸ்தான் கூறும் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் பெரும்பாலும் ஜம்மு - காஷ்மீர், லடாக் தொடர்பானவை. இந்தப் பகுதிகள் அனைத்தும் இந்தியாவின் ஒருங்கிணைந்த மற்றும் பிரிக்க முடியாத பகுதிகள் என்பதை அந்த நாடு உணர்ந்து கொள்ள வேண்டும். பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு ஜம்மு, காஷ்மீர், லடாக் பகுதிகளில் தற்போதும் மனித உரிமை மீறல்கள் நடைபெற்று வருகின்றன. அதனை பாகிஸ்தான் நிறுத்திக்கொள்ள வேண்டும்.

இந்தியா துடிப்பான ஜனநாயகத்தை கொண்ட நாடு. ஆனால், பாகிஸ்தான் அதற்கு நேரெதிரான நிலைப்பாட்டை கொண்டது. போலியான தேர்தல்களை நடத்துவது, எதிர்க்கட்சித் தலைவர்களை சிறையில் அடைப்பது, அரசியல் ரீதியில் எழும் உரிமை குரல்களை அடக்கி ஒடுக்கும் செயலில் பாகிஸ்தான் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது. எனவே, கறைபடிந்த அவர்களது ஜனநாயகத்தை பார்த்துப் பழகி உண்மையான ஜனநாயக நடைமுறைகளை போலியானவை என்று பாகிஸ்தான் கருதத் தொடங்கிவிட்டது.

அண்டை நாடுகளின் எல்லைகளில் பயங்கரவாதத்தை ஊக்குவிப்பதை பாகிஸ்தான் ஒரு கொள்கையாகவே கடைப்பிடித்து வருகிறது. அதற்கான ஆட்கள் மற்றும் ஆயுத உதவிகளை அந்த நாடு தொடர்ந்து வழங்கி வருகிறது. இது மிகவும் கண்டனத்துக்குரியது" - என்றார்.



# இஸ்ரேலுக்கு அதிநவீன வான் பாதுகாப்பு கவசம்

டெல் அவிவ், ஒக். 17

ஈரானின் அச்சுறுத்தலை எதிர்கொள்ள இஸ்ரேலுக்கு அதிநவீன 'தாட்' வான் பாதுகாப்பு கவசத்தை அமெரிக்க இராணுவம் வழங்கவுள்ளது.

பலஸ்தீனத்தின் ஹமாஸ் அமைப்பினர், லெபனானின் ஹிஸ்புல்லா போராளிகள், ஏமனை சேர்ந்த ஹவுதி கிளர்ச்சியாளர்கள், சிரியா, ஜோர்தானை சேர்ந்த போராளிகள் என பல வேறு முனைகளில் இஸ்ரேல் இராணுவம் போரிட்டு வருகிறது.

இந்தச் சூழலில் ஈரான் அச்சுறுத் தலை சமாளிக்க இஸ்ரேலுக்கு அதிநவீன 'தாட்' வான் பாதுகாப்பு கவசத்தை வழங்க அமெரிக்க இராணுவம் முடிவு செய்துள்ளது. இதனை இயக்க அமெரிக்கப் படையினர் 100 பேர் இஸ்ரேல் செல்லவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# இராணுவ ஒத்துழைப்பு இரத்து! இஸ்ரேலுக்கு பெரும் நெருக்கடி

வாஷிங்டன், ஒக். 17

காஸாவில் மனிதாபிமான உதவிகளை அதிகரிக்காவிட்டால் இராணுவ ஒத்துழைப்பு நிறுத்தப்படும் என்று இஸ்ரேலுக்கு அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில், அமெரிக்க அரசின் செய்தித் தொடர்பாளர் மத்தியூ மில்லர் கூறுகையில், "இஸ்ரேல் அரசுக்கு அமெரிக்க வெளிவிவகார செயலாளர் அன்ரனி பிளிங்கன் கடந்த ஞாயிற்றுக்கிழமை எழுதிய கடிதத்தில், காஸாவின் நிலையில் விரைவான மாற்றத்தை காண வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

காஸாவுக்குள் சில மனிதாபிமான உதவிகள் சென்றடைந்தாலும், அவை போதுமானதாக இல்லை. நாங்கள் விரைவான மாற்றத்தை காண விரும்புகிறோம். ஒரு மாதத்துக்குள் காஸாவில் மனிதாபிமான உதவிகளை அதிகரிக்காவிட்டால், இஸ்ரேலுக்கு வழங்கப்பட்டு வரும் இராணுவ ஒத்துழைப்பு இரத்து செய்யப்படுவது உள்ளிட்ட விளைவுகளை சந்திக்க நேரிடலாம்" என்று குறிப்பிட்டுள்ளார்.


# 80 ஆயிரம் ஆண்டுகளுக்கு பின்பு இந்திய வானில் வால் நட்சத்திரம்

நியூயோர்க், ஒக். 17

இந்தியாவின் தமிழகம், லடாக், கர்நாடகா மற்றும் தெலுங்கானா ஆகிய பகுதிகளில் வான் பகுதியில் வால் நட்சத்திரம் பயணம் செய்யும் நிகழ்வை காணலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்திய வானில் 80 ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்பு இந்த அரிய நிகழ்வு நடைபெறவுள்ளது.

"சூரிய மண்டலத்தில் நாம் வசிக்கும் பூமியில் பல ஆச்சரியம் தரும் நிகழ்வுகள் நடப்பது வழக்கம். அந்த வகையில் வால் நட்சத்திரம் ஒன்று 80 ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்பு இந்திய வான் பகுதியில் பயணித்து, கடந்து செல்லவுள்ளது. சி - 2023 ஏ 3 என பெயரிடப்பட்ட இந்த வால் நட்சத்திரம், 2023ஆம் ஆண்டு ஜனவரியில் வானியலாளர்களால் கண்டறியப்பட்டது.

நடப்பு ஆண்டின் செப்ரெம்பர் 28ஆம் திகதி இந்த வால் நட்சத்திரம், சூரியனின் மிக அருகே சென்றது. இதன்பின் அதன் பயணம் திசை திரும்பியுள்ளது. இதனால், பூமியில் இருந்து இதனை நாம் காண முடியும். அடுத்த 80 ஆயிரம் ஆண்டுகளுக்கு இதனை நாம் காண முடியாது. அதனால், இது மிக அரிய நிகழ்வாக பார்க்கப்படுகிறது" என்று சர்வதேச வானியலாளர்கள் தெரிவித்துள்ளனர். (எ)



# காஸாவில் இஸ்ரேல் தாக்குதல் குழந்தைகள் உட்பட15 பேர் பலி

காஸா, ஒக். 17

தெற்கு காஸாவில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 6 குழந்தைகள் உட்பட 15 பேர் உயிரிழந்தனர்.

காஸாவின் தெற்கு பகுதியிலுள்ள பெனி சுஹைலா நகரில் நேற்று முன்தினம் நள்ளிரவு இஸ்ரேல் இராணுவம் தாக்குதல் நடத்தியது. இந்தத் தாக்குதலில் 6 குழந்தைகள், 2 பெண்கள் உட்பட மொத்தம் 15 பேர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் போரில் பொது மக்களின் உயிரிழப்புகளுக்கு ஹமாஸ் அமைப்பினரே காரணம் என்றும், அவர்கள் பொது மக்களின் இருப்பிடங்களை முகாம்களாக பயன்படுத்துகின்றனர் என்றும் இஸ்ரேல் இராணுவம் குற்றஞ்சாட்டி வருகிறது. (எ)

# சீனாவை எதிர்கொள்ள அமெரிக்காவிடம் ட்ரோன்களை வாங்கி குவிக்கும் இந்தியா

புதுடில்லி, ஒக். 17

சீனாவின் அச்சுறுத்தலை எதிர்கொள்ள அமெரிக்காவிடம் இருந்து 32, 000 கோடி ரூபாய் மதிப்பில் 31 ப்ரிடேட்டர் ட்ரோன்களை வாங்க இந்தியா ஒப்பந்தம் செய்துள்ளது.

அமெரிக்க தயாரிப்பான எம். க்யூ. - 9 பி ப்ரிடேட்டர் ட்ரான்களை தற்போது அமெரிக்கா, அதன் நட்பு நாடுகள் மற்றும் நேட்டோ நாடுகள் சில பயன்படுத்துகின்றன. செயற்கைகோள் கட்டுப்பாட்டில் நீண்டநேரம் பறக்கும் இந்த ட்ரோன்கள் ஆப்கானிஸ்தான் உட்பட சில நாடுகளில் மிகத் துல்லிய தாக்குதல்களை நடத்தியுள்ளன. ரிமோட் மூலம் இயக்கப்படும் இந்த 'ஹன்ட்டர் -கில்லர்' ட்ரோன்கள் 'ஹெல்பயர்' ஏவுகணைகள் மற்றும் ஜி. பி. யு. - 39 பி குண்டுகளை வீசும் திறனுடையது.

இந்தியப் பெருங்கடல் பகுதியில் சீன போர்க்கப்பல்களின் போக்குவரத்து அதிகரித்துள்ளது. அதனால், கண்காணிப்பணிக்கு ப்ரிடேட்டர் ட்ரோன்களை ஈடுபடுத்த இந்தியா உத்தேசித்துள்ளது. முப்படை பயன்பாட்டுக்கு 31 ப்ரிடேட்டர் ட்ரோன்களை, ஆயுதங்களுடன் அமெரிக்காவிடம் இருந்து வாங்க இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அமைச்சரவை ஒப்புதல் வழங்கியது. இதையடுத்து இந்தியா - அமெரிக்கா இடையே ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. (எ)

# கனடாவில் தாக்குதல் நடத்துவதற்கு அமித்ஷா அனுமதி வழங்கினாரா?

புதுடில்லி, ஒக். 17

கனடாவில் சீக்கிய பிரிவினைவாதிகள் மீதான தாக்குதலுக்கு இந்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா அனுமதி வழங்கினார் என கனடா அதிகாரிகளை மேற்கோள்காட்டி வாஷிங்டன் போஸ்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

கனடாவிலிருந்து வெளியேற்றப்பட்ட இந்திய அதிகாரிகள் மத்தியிலான தொடர்பாடல்களில் அமித்ஷா மற்றும் இந்தியாவின் ரோ அமைப்பின் சிரேஷ்ட அதிகாரிகள் குறித்து குறிப்பிடப்பட்டிருந்ததாக கனடா அதிகாரிகள் இந்திய அரசாங்கத்துக்கு தெரிவித்துள்ளனர் என வாஷிங்டன் போஸ்ட் குறிப்பிட்டுள்ளது.

புலனாய்வுத் தகவல்களை சேகரிக்குமாறும் சீக்கிய பிரிவினைவாதிகள் மீது தாக்குதலை மேற்கொள்ளுமாறும் இந்திய உள்துறை அமைச்சரும் ரோவின் அதிகாரிகளுமே உத்தரவிட்டனர் என்பது வெளியேற்றப்பட்டுள்ள இந்திய அதிகாரிகள் மத்தியிலான உரையாடல் மூலம் தெரியவந்துள்ளதாக குறித்த ஊடகச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாவது ரி - 20 போட்டியில் இலங்கை அணி அபார வெற்றி

## 90 ஓட்டங்களுக்குள் சுருண்டது மே.இ.தீவுகள் அணி

தம்புள்ளை, ஒக். 17

இலங்கை அணியின் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாது, அடுத்தடுத்து விக்கெட்களை பறிகொடுத்த மேற்கு இந்திய தீவுகள் அணி இரண்டாவது ரி - 20 போட்டியில் படுதோல்வியடைந்தது. வெறும் 90 ஓட்டங்களுக்குள் அந்த அணி அனைத்து விக்கெட்களையும் பறிகொடுத்தது. இதன் மூலம் இலங்கை அணி 73 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரை சமப்படுத்தியது.

மேற்கு இந்திய தீவுகள் கிரிக்கெட் அணி இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ரி - 20 மற்றும் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதலில் ரி - 20 போட்டிகள் நடைபெற்று வருகின்றன. முதல் ரி - 20 போட்டியில் மேற்கு இந்திய தீவுகள் அணி வெற்றி பெற்றது. இரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது ரி - 20 போட்டி நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது. இந்த ஆட்டத்துக்கான நாணயச்சுழற்சியில் வென்ற இலங்கை முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. இதையடுத்து தொடக்க ஆட்டக்காரர்களாக பதும் நிஸ்ஸங்க மற்றும் குசல் மெண்டிஸ் ஆகியோர் களமிறங்கினர். இதில் குசல் மெண்டிஸ் 26 ஓட்டங்களிலும் அடுத்து களமிறங்கிய குசல் பெரேரா 24 ஓட்டங்களிலும், மறுபுறம் நிலைத்து நின்று விளையாடிய பதும் நிஸ்ஸங்க அரைச்சதம் அடித்த நிலையில் 54 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். தொடர்ந்து கமிந்து மெண்டிஸ் மற்றும் சரித் அசலங்க ஆகியோர் ஜோடி சேர்ந்தனர். இதில் அசலங்க 9 ஓட்டங்களிலும், கமிந்து 19 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். இறுதியில் இலங்கை அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழந்து 162 ஓட்டங்கள் எடுத்தது. மேற்கு இந்திய தீவுகள் தரப்பில் ரொமாரியோ ஷெப்பர்ட் 2 விக்கெட்கள் வீழ்த்தினார். இதையடுத்து 163 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் மேற்கு இந்திய தீவுகள் அணி விளையாடியது .



தொடக்கம் முதல் இலங்கை அணியின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் மேற்கு இந்திய தீவுகள் அணி அடுத்தடுத்து விக்கெட்களை இழந்தது. இதனால் அந்த அணி 16.1 ஓவர்களில் 89 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் பறிகொடுத்தது. இலங்கை அணி 73 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அந்த அணி சார்பில் துனித் வெல்லாலகே 9 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்கள் வீழ்த்தி அசத்தினார். அணித் தலைவர் சரித் அசலங்க, மஹீஷ் தீக்சனா, வனிந்து ஹசரங்க ஆகியோர் தலா 2 விக்கெட்கள் வீழ்த்தினர். தொடர் 1 - 1 என்ற கணக்கில் சமநிலையை எட்டியுள்ள நிலையில் கடைசி ரி - 20 போட்டி இன்று நடைபெறுகிறது. (எ)

# கம்ரான் குலாம் அதிரடி சதம் பாக். 259 ஓட்டங்கள் சேர்ப்பு

முல்தான், ஒக். 17

இங்கிலாந்து அணிக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் அணி முதல் நாள் ஆட்டத்தில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 259 ஓட்டங்கள் சேர்த்தது. கம்ரான் குலாம் சதம் விளாசினார்.

முல்தானில் நேற்று முன்தினம் தொடங்கிய இந்த டெஸ்ட் போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடி வருகிறது. அந்த அணிக்கு தொடக்கம் சற்று அதிர்ச்சியாக இருந்தது. அப்துல்லா ஷபிக் 7 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஜேக் லீச் பந்தில் விக்கெட்டை பறிகொடுத்தார்.

இதையடுத்து களமிறங்கிய அணித் தலைவர் ஷான் மசூத் 3 ஓட்டங்களில் ஜேக் லீச் பந்தில் நடையை கட்டினார். 19 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களை இழந்த நிலையில் சைம் அயூப்புடன் இணைந்த அறிமுக வீரரான கம்ரான் குலாம் நிதானமாக விளையாடினார். இருவரும் சிறந்த இணைப்பாட்டத்தை கட்டமைத்தனர்.

பொறுமையாக விளையாடிய சைம் அயூப் 160 பந்துகளில், 7 பௌண்ட்ரிகளுடன் 77 ஓட்டங்கள் எடுத்த நிலையில் மத்தியூ பட்ஸ் பந்தில் ஆட்டமிழந்து வெளியேறினார். 3ஆவது விக்கெட்டுக்கு சைம் அயூப் - கம்ரான் குலாம் ஜோடி 149 ஓட்டங்கள் சேர்த்தது. இதைத் தொடர்ந்து களமிறங்கிய சவுத் ஷகீல் 4 ஓட்டங்கள் எடுத்த நிலையில் பிரைடன் கார்ஸ் பந்தில் விக்கெட் காப்பாளர் ஜேமி ஸ்மித்திடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

5ஆவது விக்கெட்டுக்கு களமிறங்கிய முகமது ரிஸ்வான் தடுப்பாட்டத்தில் அதிக கவனம் செலுத்தி ஓட்டங்கள் சேர்த்தார். மறுமுனையில் நிதானமாக விளையாடிய கம்ரான் குலாம் 192 பந்துகளில், ஒரு சிக்ஸர், 9 பௌண்ட்ரிகளுடன் சதமடித்தார்.



இந்த நிலையில் 118 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஷோயிப் பஷிர் பந்தில் அவர் ஆட்டமிழந்தார். முகமது ரிஸ்வானுடன் இணைந்து கம்ரான் குலாம் 5ஆவது விக்கெட்டுக்கு 65 ஓட்டங்கள் சேர்த்தார்.

முதல் நாள் ஆட்டத்தின் முடிவில் பாகிஸ்தான் அணி 90 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 259 ஓட்டங்கள் சேர்த்தது. முகமது ரிஸ்வான் 37 ஓட்டங்களும், சல்மான் ஆகா 5 ஓட்டங்களும் சேர்த்து களத்தில் இருந்தனர். கைவசம் 5 விக்கெட்கள் இருக்க பாகிஸ்தான் அணி நேற்று 2ஆவது நாள் ஆட்டத்தை தொடர்ந்து விளையாடியது.

(எ)

# 6 விக்கெட் வித்தியாசத்தில் மே.இ.தீவுகள் அணி வெற்றி

டுபாய், ஒக். 17

இங்கிலாந்துக்கு எதிரான ரி - 20 போட்டியில் மேற்கு இந்திய தீவுகள் அணி 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

9ஆவது மகளிர் ரி - 20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள டுபாய் மற்றும் சார்ஜாவில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற கடைசி லீக் ஆட்டத்தில் (பி பிரிவு) முன்னாள் சம்பியன்களான மேற்கு இந்திய தீவுகளும் இங்கிலாந்தும் மோதின. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 7 விக்கெட்கள் இழப்புக்கு 141 ஓட்டங்கள் சேர்த்தது.

தொடர்ந்து விளையாடிய மேற்கு இந்திய தீவுகள் அணி 18 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 142 ஓட்டங்கள் எடுத்து 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் 3ஆவது வெற்றியை ருசித்தது. "பி" பிரிவில் இங்கிலாந்து, மேற்கு இந்திய தீவுகள், தென்னாபிரிக்கா ஆகிய அணிகள் தலா 6 புள்ளிகளுடன் சமநிலை வகித்த போதிலும் ஓட்ட சதவீத அடிப்படையில் மேற்கு இந்திய தீவுகள் அணியும், தென்னாபிரிக்க அணியும் முதல் இரு இடங்களைப் பிடித்து அரையிறுதிக்கு முன்னேறின. இங்கிலாந்து வெளியேறியது.

அவுஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய அணிகளும் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளன. (எ)

# மெஸ்ஸி ஹட்ரிக் கோல் ஆர்ஜென்ரீனா அசத்தல்

பியூனஸ் அயர்ஸ், ஒக். 17

2026ஆம் ஆண்டு பிபா உலகக் கிண்ண உதைபந்தாட்ட தொடருக்கான தகுதிச் சுற்று போட்டியில் பொலிவியா அணிக்கு எதிராக ஹட்ரிக் கோல் பதிவு செய்து மெஸ்ஸி அசத்தியுள்ளார். இந்தப் போட்டியில் ஆர்ஜென்ரீன அணி 6 - 0 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்றது.

தென் அமெரிக்க நாடுகளுக்கு இடையிலான தகுதிச் சுற்றுப் போட்டிக்கான இந்த ஆட்டம் ஆர்ஜென்ரீனாவில் நடைபெற்றது. கணுக்கால் காயம் காரணமாக சமீபகால போட்டிகளில் பங்கேற்காத நட்சத்திர வீரர் லயோனல் மெஸ்ஸி அணிக்குத் திரும்பினார். இந்த நிலையில் 19, 84, 86 ஆகிய நிமிடங்களில் மெஸ்ஸி கோல் பதிவு செய்தார். சக அணி வீரர்கள் 2 கோல்கள் பதிவு செய்ய மெஸ்ஸி உதவினார். இதன் மூலம் தனது அபார ஆட்டத்திறனை அவர் வெளிப்படுத்தினார். இதில் மெஸ்ஸி பதிவு செய்த இரண்டாவது கோல் கிளாசிக் ரகம். பந்தை இடது காலில் இருந்து வலது காலுக்கு மாற்றி அதனை கோல் கம்பத்தின் வலது பக்கமாக (கீழ்புறம்) தள்ளி கோல் பதிவு செய்தார். அடுத்த இரண்டு நிமிடங்களில் மூன்றாவது கோலை அவர் பதிவு செய்தார்.

ஆர்ஜென்ரீனாவின் மார்டினஸ், அல்வரஸ் மற்றும் தியாகோ ஆகியோரும் நிமிடங்களில் கோல் பதிவு செய்தனர். இந்த வெற்றியின் மூலம் 10 அணிகள் பங்கேற்றுள்ள தென் அமெரிக்க நாடுகளுக்கு இடையிலான பிபா உலகக் கோப்பை உதைபந்தாட்ட தொடருக்கான தகுதி சுற்றில் 10 போட்டிகளில் விளையாடி 22 புள்ளிகளை ஆர்ஜென்ரீனா பெற்றுள்ளது. இதன் மூலம் பட்டியலில் அந்த அணி முதலிடத்தில் உள்ளது.

ஆர்ஜென்ரீனா நடப்பு உலக சம்பியனாகும். 2026 பிபா உலகக் கிண்ண உதைபந்தாட்ட தொடர் போட்டிகள் கனடா, மெக்சிக்கோ மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளில் நடைபெறவுள்ளன. (எ)



# டென்மார்க் ஓபன் பட்மிண்டன் 2ஆவது சுற்றில் பி. வி. சிந்து

ஒடென்ஸ், ஒக். 17

டென்மார்க் ஓபன் பட்மிண்டன் தொடரில் பி. வி. சிந்து 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

டென்மார்க் - ஒடென்ஸ் நகரில் இந்தத் தொடர் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவின் முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் இந்தியாவின் பி. வி. சிந்து, சீன தைபேயின் பை யு-போ உடன் மோதினார்.

இந்தப் போட்டியில் தொடக்கம் முதலே அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய பி. வி. சிந்து முதல் செட்டை 21 - 8 என்ற புள்ளிக்கணக்கில் கைப்பற்றினார். தொடர்ந்து நடைபெற்ற 2ஆவது செட்டில் சிந்து 13 - 7 என்ற புள்ளிக்கணக்கில் முன்னிலையில் இருந்தார்.

அப்போது பை யு-போ முழங்காலில் காயம் ஏற்பட்டதை அடுத்து அவர் போட்டியில் இருந்து வெளியேறினார். இதனையடுத்து பி. வி. சிந்து 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார். (எ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியலில்...

ஒய்வு பெறமாட்டார்கள்.

எனினும், எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை. இது ஒரு தற்காலிக முடிவு. எதிர்வரும் தேர்தலில் பொதுஜன பெரமுன பெரும்பான்மை வாக்குகளைப் பெறும் - என்றார். (அ)

## மனித...

முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. தேர்தலுக்கு பின்னர் எவ்வித தேர்தல் வன்முறைச் சம்பவங்களும் பதிவாகவில்லை. தற்போதைய தேர்தல் காலப் பகுதியிலும் அதேபோன்றதொரு அமைதியான சூழ்நிலையை பாதுகாப்பதற்கு எதிர்பார்க்கின்றோம்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் தேசிய பொறிமுறை ஊடாக உரிய தலையீடுகள் மேற்கொள்ளப்படும். ஜெனிவா கூட்டத்தொடரிலும் இது தொடர்பில் எமது நிலைப்பாடு தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் எமது நாட்டு அரசமைப்பு, குற்றவியல் சட்டம் உட்பட ஏனைய சட்டங்களுக்கு அமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படும். அதுமட்டுமல்ல எதிர்காலத்தில் அவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாமல் இருப்பதற்குரிய நடவடிக்கையும் எடுக்கப்படும். சர்வதேச மனித உரிமை சட்ட திட்டம், பொறிமுறைகளின் உதவிகளும் பெறப்படும். எது எப்படி இருந்தாலும் தேசிய பொறிமுறை ஊடாகவே நடவடிக்கை இடம்பெறும் - என்றார். (அ)

## இந்திய...

வலியுறுத்தியுள்ள அவர், இரு நாடுகளினதும் தலைவிதிகள் பின்னிப்பிணைந்தவை என்பதை சுட்டிக்காட்டினார்.

கொழும்பில் இடம்பெற்ற பட்டயக் கணக்காளர்கள் சங்கத்தின் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாங்கள் இணைந்து வளரவேண்டும். செழிப்படையவேண்டும். நாங்கள் வரலாறு, புவியியல் மற்றும் எதிர்காலத்தினால் இயற்கையாகவே பிணைக்கப்பட்டிருக்கின்றோம்.

நாங்கள் ஈடு செய்ய முடியாதவர்கள்- இன்றியமையாதவர்கள் மற்றும் பிரிக்க முடியாதவர்கள்.

பிளவுகளை உருவாக்கும் எந்தவொரு முயற்சியும் இரு நாடுகளினதும் பகிரப்பட்ட அபிலாசைகள் மற்றும் எதிர்காலத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடியவை - என்றார். (அ)

## ஐரோப்பிய...

எஸ்.ஜதுசன் என்ற இளைஞரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள் ளார்.

குறித்த நபர் ஒரு வருடத்துக்கு முன்னர் அரபு நாடு ஒன்றில் இருந்து ஐரோப்பாவுக்கு செல்ல முயற்சி மேற்கொண்டு வந்துள்ளார்.

சிறு வயது முதல் தந்தையை இழந்த இளைஞர், உறவினர்கள் உதவியுடன் ஐரோப்பிய நாட்டுக்குச் செல்லும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், கடந்த திங்கட்கிழமை எட்டு பேர் கொண்ட இளைஞர் குழு ஐரோப்பா-ரஷ்ய எல்லையை கடக்க முயற்சி செய்த நிலையில் குறித்த உயிரிழப்பு இடம்பெற்றுள்ளது.

இது கொலையா அல்லது இயற்கை மரணமா என்ற கோணத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. சடலத்தை நாட்டுக்கு கொண்டு வர உறவினர்கள் முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றனர். (அ)




யாழ். ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் வித்தியாலய மாணவர்களின் "சிறுவர் சந்தை" நிகழ்வு நேற்று முன்தினம் காலை நடைபெற்றது.
(படங்கள்: ஐ. சிவசாந்தன்)

## அமைச்சர்களுக்கு...

மாத்திரம் இந்த எண்ணிக்கையில் மாற்றம் செய்யப்படும் என்றும் அரசாங்கம் கூறியுள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் அரசியல்வாதிகளுக்கு பாதுகாப்பு வழங்கப்படமாட்டாது என்று தேசிய மக்கள் சக்தி அறிவித்திருந்த நிலையில், தற்போது அதன் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## இரு...

இக்காலப்பகுதிக்குள் அறிவிக்கை வெளியிடப்படும் என்ற உத்தரவாதத்தை அரசாங்கம் வழங்கினால் என்னிடம் உள்ள அறிக்கைகளை அரசாங்கத்திடம் கையளிப்பேன். அவ்வாறு இல்லாவிட் டால் நான் கூறியதுபோன்று எதிர்வரும் திங்கட்கிழமை அறிக்கைகளை வெளியிடுவேன்.

பாரிய குற்றம் இழைப்பதாக கூறி நாம் வெளிப்படுத்தவிருக்கும் அறிக்கையை வெளிப்படுத்தாமல் தடுக்க முடியாது. எதிரிக்கு அஞ்சாமையின் காரணமாக தான் நாம் துணிச்சலுடன் இந்த விடயத்தை வெளிப்படுத்தியுள்ளோம். உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் ஓய்வுபெற்ற நீதியரசர்களான இமாம் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட விசாரணை அறிக்கை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஜூலை மாதம் 25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கை அவரிடம் மூன்று மாதங்கள் இருந்தன. ஆனால் அந்த அறிக்கையில் விடயங்கள் வெளிப்படுத்தப்படவில்லை . அநுரகுமார ஜனாதிபதியின் கரங்களுக்கு இந்த அறிக்கை கிடைக்கப்பெற்று மூன்று நாட்களுக்குள் அறிக்கையின் தகவல்கள் வெளியாகி யுள்ளன. ஜனாதிபதி அலுவலகத்தின் தகவல்களை திருடும் எலியை முதலில் அவர்கள் கண்டுபிடிக்க வேண்டும். அதுவே அரசாங்கத்துக்கு சிறந்த விடயமாக அமையும்.

நான் இந்த விடயத்தை வெளியிடுவதற்கு முன்னராக அரசாங்கத்தின் இரகசிய தகவல்களை வெளியிடல் குறித்த சட்டத்தின் ஊடாகவோ, பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தின் சட்ட திட்டங்களுக்கு அமையவோ அந்த அறிக்கையை வெளியிட முன்னர் என்னை கைது செய்யவதற்கான கலந்துரையாடலொன்று அரசாங்கத்தின் உயர் மட்டக்குழுவுடன் இடம்பெற்றுள்ளது.

தேசிய பாதுகாப்பு கருதி இந்த அறிக்கையின் இரகசிய தகவல்களை நான் வெளியிடப்போவதில்லை. அதுவும் இந்த அறிக்கைகள் இரண்டையும் வெளிப்படுத்த தயார் என ஜனாதிபதி அல்லது அமைச்சர் விஜித ஹேரத் கூறும் வரை அந்த அறிக்கையின் விட யங்களை வெளிப்படுத்தப்போவதில்லை என உறுதியளிக்கின்றேன்.

இருப்பினும் எந்த காரணத்துக்காகவும் என்னிடமுள்ள அறிக்கைகளை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்க நான் தயாராகவில்லை. இத்தகைய பின்னணியில் ஜனாதிபதி அந்த அறிக்கையை வெளியிடவில்லையாயின் நான் எதிர்வரும் திங்கட்கிழமை அந்த அறிக்கையை வெளியிடுவேன் - என்றார். (அ)

# பொலிஸ் - வேட்பாளர்கள் இடையே யாழில் நேற்றுக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக். 17

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கும் யாழ்ப்பாண பொலிஸாருக்குமிடையிலான கலந்துரையாடல் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் இந்தக் கலந்துரையாடல் நேற்று நடைபெற்றது. தேர்தல் கால வன்முறைகள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டதுடன் பாராளுமன்றத் தேர்தல் காலங்களில் ஏற்படும் பிரச்னைகள் மற்றும் வன்முறைகள் தடுக்கும் முகமாக குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த கலந்துரையாடலில் வேட்பாளர்கள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (அ)

## மன்னார்...

நடவடிக்கைகள் மேற்கொள்ள நீதிமன்றத்தினால் கட்டளை ஆக்கப்பட்டது.

இதற்கமைய திருக்கேதீஸ்வர மனிதப் புதைகுழி வழக்கு மீண்டும் நவம்பர் மாதம் 21 ஆம் திகதி அழைக்கப்படவுள்ளது.

மன்னார் சதொச மனிதப் புதைகுழி எச்சங்கள் தொடர்பில், இறப்புக்கான காரணம், பாலினம், அதற்கான வயதெல்லை போன்ற விடயங்கள் சம்பந்தமான அறிக்கை தயாரிப்பதற் கான ஆய்வு நடவடிக்கைகளை முன்னெ டுக்க, இடவசதிகள் போதாமல் உள்ள மையால், நீதிமன்றத்தில் ஒரு கட்டளை ஆக்குமாறு கோரப்பட்டது.

அதற்கான கட்டளை நேற்று மன்னார் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டது.

இந்த வழக்குகளின்போது, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சார்பாக சட்டத்தரணி வி.எஸ்.நிறஞ்சன் மன்றில் முன்னிலையானார்.

இது குறித்து அவர் தெரிவிக்கையில்-

மன்னார் திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழி தொடர்பான வழக்கு விசாரணை இன்றைய தினம்(நேற்று) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது வைத்தியர் வி.எல். வைத்தியரெட்ணவும், சி.ஐ.டி.உத்தியோகத்தர்களும், காணாமல் ஆக்கப்பட்டோர் சார்பான சட்டத்தரணிகளும், அரச சட்டத்தரணிகளும் மன்றில் ஆஜராகி இருந்தனர்.

இதன்போது ஏற்கனவே மனித எச்சங்களில் இருந்து பகுப்பாய்வுக்கு பிரித்து எடுக்கப்பட்ட மாதிரிகள் நீதிமன்ற கட்டுக் காவலில் இருப்பதாகவும், அதனை சீ-14 பரிசோதனைக்காக அமெரிக்காவின் புளோரிடாவுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளுக்காக நேற்று வைத்தியரினால் கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டன.

அது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ள நீதிமன்றத்தினால் கட்டளை ஒன்று ஆக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, ஏற்கனவே எடுக்கப்பட்ட மனித எச்சங்களின் மாதிரிகளுக்கான அறிக்கை இன்றைய தினம் புதன்கிழமை (நேற்று) மன்றில் சமர்ப்பிக்கப்பட இருந்தது.

எனினும் அவர் நீதிமன்றத்துக்கு சமூகமளிக்காத காரணத்தினால் குறித்த அறிக்கையை எதிர்வரும் மாதம் 21 ஆம் திகதி தாக்கல் செய்வதாக தவணை எடுக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் குறித்த அறிக்கை மன்றில் சமர்ப்பிக்கப்படும். அத்தோடு குறித்த மாதிரிகள் சீ-14 பரிசோதனைக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் தொடர்பான விவரங்கள் அன்றைய தினம் அறிவிக்கப்படும்.

இந்த நிலையில் குறித்த திருக்கேதீஸ்வர மனித புதைகுழி வழக்கு மீண்டும் எதிர்வரும் நவம்பர் மாதம் 21 ஆம் திகதி திகதி அழைக்கப்பட உள்ளது.

அத்தோடு மேலதிகமாக சதோச மனிதப் புதை குழியை மீண்டும் தோண்ட வேண்டுமா அல்லது அதனை பாதுகாக்க வேண்டுமா என்பது தொடர்பான அபிப்பிராயங்களை பேராசிரியர் ராஜ் சோமதேவ, சட்ட வைத்தியர் ராஜபக்ஷ ஆகியோர் அறிக்கை ஒன்றை எதிர்வரும் நவம்பர் மாதம் 21 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படவேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது-என்றார். (அ)

## எக்னலிகொட...

விசாரணைக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், ஏனைய கொலைகள் தொடர்பான விசாரணைகள் எதிர்காலத்தில் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என அரசாங்கம் கூறுகிறது.

அமைச்சர் விஜித ஹேரத் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எந்தவொரு குற்றவியல் நடவடிக்கையையும் நாங்கள் விசாரிக்காது இருக்க மாட்டோம். அதனால் தான் சமீபத்திய சம்பவங்களான தாஜூதீன் கொலை, லசந்த விக்கிரமதுங்க கொலை, மற்றும் பிரகீத் எக்னெலிகொட கொலை என அனைத்தையும் நாங்கள் நிச்சயமாக விசாரிப்போம்.

பிரகீத் எக்னெலிகொட கொலைச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் முடிக்கப்பட்டு வழக்கு நடந்து வருகிறது. மீண்டும் ஒரு விசாரணை தேவையில்லை.

மேலதிக விசாரணைகள் தேவைப்படுமாயின் அதனை தொடரவும் முடியும். 7 முக்கிய குற்றவியல் வழக்குகள் துரித விசாரணைக்காக பரிந்துரைக்கப்பட்டு அவசரமாக முடிக்கப்பட வேண்டியுள்ளது. மற்றபடி 7 தான் என்று தவறாக எண்ண வேண்டாம்.

கடந்த காலங்களில் நடந்த அனைத்துப் பொருளாதாரக் குற்றங்கள், கொலைகள், ஊடகவியலாளர்கள் கடத்தல் போன்ற அனைத்துச் செயல்களுக்கும் சட்டம் அமுல்படுத்தப்படும் - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# இலங்கையின் ஜனாதிபதி தேர்தல் சிறந்த ஜனநாயக முன்னுதாரணம்!

## ஜப்பானியத் தூதுவர் பாராட்டு



கொழும்பு, ஒக். 17

**இலங்கையின் ஜனாதிபதி தேர்தல் ஜனநாயகத்துகான முன்னுதாரணம் என இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிசுகோசி ஹிடேகி பாராட்டியுள்ளார்.**

இலங்கையின் சமீபத்தைய ஜனாதிபதித் தேர்தல் அமைதியான ஜனநாயக ரீதியிலான அதிகார மாற்றத்திற்கான நாட்டின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியுள்ளது எனவும் அவர் கூறினார்.

ஜனநாயக கொள்கைகளுக்கு ஊக்கமளிக்கும் அர்ப்பணிப்புக்காக இலங்கையின் அரசியல்வாதிகள், பொதுமக்களுக்கு ஜப்பான் தூதுவர் தனது பாராட்டுகளை தெரிவித்தார்.

சமீபத்தைய ஜனாதிபதி தேர்தல் உண்மையாகவே ஊக்கமளிக்கும் ஒன்று. ஜனநாயகரீதியிலான அமைதியான அதிகார மாற்றத்திற்காக மக்களும் அரசியல்வாதிகளும் வெளிப்படுத்தியுள்ள அர்ப்பணிப்பு ஊக்கமளிக்கும் ஒன்று என தெரிவித்துள்ள ஜப்பான் தூதுவர், நீங்கள் ஜனநாயகத்தின் மீது நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளீர்கள். அது உயிர்த்துடிப்பு மிக்க செழிப்பு மிக்க அமைதியான இலங்கையை உருவாக்குவதற்கு அனைத்து மக்களும் ஒன்றிணைவார்கள் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது என குறிப்பிட்டார்.

இலங்கையின் புதிய தலைவர்களுடனான எனது பேச்சுவார்த்தைகள் நம்பிக்கை அளிப்பவையாக காணப்பட்டன. ஆட்சிமுறை சீர்திருத்தம், ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகள், அனைவரையும் உள்ளடக்கிய அபிவிருத்தி சர்வதேச ஒத்துழைப்புக்கான தங்கள் அர்ப்பணிப்பை அவர்கள் வலியுறுத்தினார்கள் என அவர் கூறினார்.

ஊழலை ஒழிக்கவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ள ஜப்பானிய தூதுவர், ஆட்சிமுறை சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதே புதிய அரசாங்கத்தின் முக்கிய நிகழ்ச்சி நிரலாக காணப்படவேண்டும் என தெரிவித்தார். (அ)



## சூரிய மின்கல யானைவேலிகளை அமைக்கும் பணி கிளிநொச்சியில்!

கிளிநொச்சி, ஒக். 17

சூரிய மின்கல யானைவேலி அமைக்கும் பணி கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்பட்டது.

காட்டு யானைகளிடமிருந்து விவசாயிகளின் வாழ்வாதார பயிர்களைப் பாதுகாக்கும் நோக்குடன் உலக வங்கியின் நிதி உதவியில் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் கீழ் இந்த சூரிய மின்கல யானைவேலி அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பூநகரி கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட செம்மன்குன்று பகுதியில் இந்த பணி முன்னெடுக்கப் பட்டு வருகிறது.

இத்திட்டத்துக்கான பணிகள் வடக்கு மாகாணத்தில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களை உள்ளடக்கி மேற்கொள்ளப்படுகின்றன.

கிளிநொச்சியில் பூநகரி, அக்கராஜன்குளம், முழங்காவில் கமநல சேவை நிலையத்துக்கு உட்பட்ட, தெரிவு செய்யப்பட்ட பகுதிகளில் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்நிகழ்வில் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத்திட்டத்தின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகாரி சாம்பசிவம் கேசிகா, பூநகரி கமநல சேவை நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் கு.குணசீலன் உட்பட விவசாயிகள் பலர் கலந்துகொண்டனர். (அ)

# அர்ஜுன் அலோசியஸ் போன்று விரைவில் பலர் சட்டத்தின் முன்!

## கூறுகிறார் அமைச்சர் விஜித ஹேரத்

கொழும்பு, ஒக். 17

நாட்டில் பாரிய வர்த்தகர்கள் பலரும் கோடிக்கணக்கில் அரசாங்கத்துக்கு வரி செலுத்தாமலிருக்கின்றனர். விரைவில் அவர்களும் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர் என்று அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் பாரிய வர்த்தகர்கள் பலரும் கோடிக்கணக்கில் அரசாங்கத்துக்கு வரி செலுத்தாமலிருக்கின்றனர். அவ்வாறானவர்களில் ஒருவரே அர்ஜூன் அலோசியஸ். அவர் 355 கோடி ரூபா வரி செலுத்தாமல் தவிர்த்திருக்கின்றார். தேசிய வருமான வரித் திணைக்களத்தினால் இந்த வழக்கு தொடரப்பட்டிருந்தது.

அதற்கமையவே அவருக்கு 6 மாத காலச் சிறை தண்டனை வழங்கப்பட்டது. வரி செலுத்தாமல் இருந்தமைக்காகவே இந்த தண்டனை வழங்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த தீர்ப்பின் ஊடாக அரசாங்கத்துக்கு வரவேண்டிய அந்த 355 கோடி ரூபா கிடைக்கப்போவதில்லை.

இந்த பாரிய தொகையைப் பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். விரைவில் அதனை செய்ய நாம் எதிர்பார்த்துள்ளோம். இந்த விவகாரத்தில் நபர்கள் தொடர்பான தராதரம் இன்றி நடவடிக்கை எடுப்பதிலிருந்து பின்வாங்கப் போவதில்லை. அது முறையான வழிமுறைக்கமைய முன்னெடுக்கப்படும் - என்றார். (அ)

## கடலுக்கு செல்லவேண்டாம்!

கொழும்பு, ஒக். 17

மட்டக்களப்பு முதல் திருகோணமலை மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக மன்னார் வரையான கடற்பிராந்தியங்களுக்கு இன்று வியாழக்கிழமை வரை செல்ல வேண்டாம் கடற்றொழிலாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டை சூழவுள்ள கடற்பிராந்தியங்களில் இடைக்கிடையே மழை அல்லது இடியுடன் கூடிய மழைவீழ்ச்சி பதிவாகக்கூடும்.

காலி முதல் அம்பாந்தோட்டை, மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் காங்கேசன்துறை ஊடாக மன்னார் வரையான கடற்பிராந்தியங்களில் மணித்தியா ஷலத்துக்கு 60 முதல் 65 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும். ஏனைய பகுதிகளில் 50 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும்.

சிலாபம் முதல் கொழும்பு, காலி, அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பிராந்தியங்களில் கடல் அலையானது 2.5 முதல் 3 மீற்றர் வரை மேலெழக்கூடுமென எதிர்வு கூறப்பட்டுள்ளது. (அ)


# இலங்கையில் மருந்து உற்பத்தி; கவனம் செலுத்துகிறது கியூபா!

கொழும்பு, ஒக். 17

இலங்கையில் மருந்துப் பொருட்களை உற்பத்தி செய்வதில் கியூபா அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக இலங்கைக்கான கியூபா தூதுவர் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ஹரிணி அமரசூரியவுக்கு கியூபா அரசாங்கத்தின் வாழ்த்துக்களை கூறும் போதே பிரதமர் அலுவலகத்தில் கியூபா தூதுவர் இதனை குறிப்பிட்டார்.

இதேவேளை இலங்கைக்கும் கியூபாவுக்கும் இடையிலான ஏறக்குறைய 65 வருட கால இராஜதந்திர உறவை மேலும் வலுப்படுத்துதல், கியூபாவின் உதவியின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட நிறுத்தப்பட்ட நுளம்பு ஒழிப்பு திட்டங்களை மீள ஆரம்பித்தல், இலங்கையில் உள்ள பயிற்சி நிலையங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு மருத்துவ மற்றும் விளையாட்டு கல்விக்கான புலமைப்பரிசில்களை வழங்குதல் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது.



மேலும் கடந்த சில வருடங்களில் கியூபா பொருளாதார ரீதியாக சவால்களை எதிர்கொண்டபோதிலும், கியூபாவின் தொடர்ச்சியான ஆதரவுக்கு தனது நன்றியைத் தெரிவித்த பிரதமர், கியூபா பிரதமருக்கு இலங்கை விஜயம் செய்ய உத்தியோகபூர்வ அழைப்பையும் விடுத்திருந்தார். (அ)

# அரச ஊழியர்களின் சம்பள உயர்வு தீர்மானம் குறித்து ஆராயவேண்டும்

## அமைச்சர் விஜித ஹேரத் தகவல்

கொழும்பு, ஒக். 17

2025ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு முன்னைய அரசாங்கம் எடுத்த தீர்மானம் தொடர்பில் மேலும் ஆராயப்படவேண்டுமென அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேர்தல் நெருங்கியபோது, கடந்த அமைச்சரவை திடீரென முடிவொன்றை எடுத்திருந்தது. அரச ஊழியர்களின் சம்பளத்தை ஜனவரி முதல் உயர்த்துவது குறித்து. ஆனால் ஆராய்ந்து பார்த்தபோது இதற்கு நிதியமைச்சு அனுமதி வழங்கவில்லை. உண்மையிலேயே மக்களை ஏமாற்றும் வேலைதான் நடந்துள்ளது.

நாம் அப்படியெல்லாம் சொல்லவில்லை, அதனை நிறைவேற்ற முடியுமா?எவ்வாறு? என ஆராய்ந்து நிதி நிலவரத்தைப் பொறுத்து புதிய முடிவை எடுப்போம். இல்லை என்று கூறமாட்டோம். நிதி நிலையினைப் பார்த்துதான் முடிவு எடுக்க வேண்டும் - என்றார். (அ)

## சிறுவர் இல்ல காவலாளி கொலை சந்தேகத்தில் 2 சிறுவர்கள் கைது!

கொழும்பு, ஒக். 17

பெபிலியான பிரதேசத்தில் உள்ள சிறுவர் இல்லத்தில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டருந்த காவலாளியொருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் 16 மற்றும் 17 வயதுடைய இரண்டு சிறுவர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நீதிமன்றங்களால் பரிந்துரைக்கப்பட்ட 12 சிறுவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ள சிறுவர் இல்லத்திலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த சிறுவர்கள் 80 வயது மதிக்கத்தக்க காவலாளியை சிறுவர் இல்லத்தில் உள்ள கிணற்றில் தள்ளிக் கொலை செய்துள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

இதுகுறித்த மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 17.10.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.